தினமணி

# "3 ஆண்டுகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 5,213 கோடி வங்கிக் கடன்'

First Published : 05 Feb 2010 10:10:37 AM IST
Last Updated :

அரியலூர், பிப். 4: திமுக அரசு பொறுப்பேற்ற கடந்த 3 ஆண்டுகளில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் ரூ. 5,213 கோடி கடனும், சுழல் நிதியாக ரூ. 215 கோடியும் வழங்கப்பட்டுள்ளது என்றார் துணை முதல்வர் மு.க. ஸ்டாலின்.

அரியலூர் மாவட்டம், நடுவலூரில் புதிய சமத்துவபுரத்தை வியாழக்கிழமை திறந்துவைத்து, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், சுழல் நிதியை வழங்கி அவர் பேசியது:

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் ரூ. 1,644 கோடி மட்டுமே கடனாக வழங்கப்பட்டது. ஆனால், திமுக பொறுப்பேற்ற 3 ஆண்டுகளிலேயே ரூ. 5,213 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் சுழல் நிதியாக ரூ. 76 கோடி வழங்கப்பட்டது. ஆனால், திமுக ஆட்சியில் சுழல்நிதியாக இதுவரை ரூ. 215 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் இந்தியன் வங்கி வழங்கிய சுய உதவிக் குழுக் கடன்களில், தமிழகத்தில் மட்டும் 60 சதத்தை வழங்கியுள்ளது.

அரியலூர் - கும்பகோணத்தை இணைக்கும் வகையில், புதிய உயர் மட்டப் பாலம் அமைக்க வேண்டுமென ஜெயங்கொண்டம் முன்னாள் எம்எல்ஏ க.சொ. கணேசன், தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

இதனடிப்படையிலேயே, இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்த நீலத்தநல்லூர்-மதனத்தூர் இடையே கொள்ளிடம் ஆற்றில் ரூ. 35 கோடியில் உயர் மட்டப் பாலத்தை நபார்டு திட்டத்தின்கீழ் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

ரூ. 14 லட்சத்தில் ஊரக வளர்ச்சித் துறை மூலமும், ரூ. 20 லட்சத்தில் பேரூராட்சிகள் துறை மூலமும் புதிய அலுவலகக் கட்டடம், ரூ. 27 கோடியில் அரியலூர் நகராட்சியில் புதைச் சாக்கடைத் திட்டம், கல்வித் துறை சார்பில் ரூ. 27 லட்சத்தில் புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டும் பணி உள்ளிட்ட ரூ. 94 கோடியிலான திட்டங்களுக்கு, தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

தா. பழூர் ஒன்றியம், நடுவலூரில் ரூ 2.2 கோடியில் சமத்துவபுரம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 63 லட்சத்தில் 23 நூலகக் கட்டடங்கள், ஊரகக் கட்டமைப்புத் திட்டத்தின் கீழ் 6 சமையலறைக் கட்டடங்கள், 3 பொது விநியோகக் கட்டடங்கள், ஓர் அங்கன்வாடிக் கட்டடம் என ரூ. 18 லட்சத்தில் 10 கட்டடங்களும், ரூ. 36 லட்சத்தில் 6 ஊராட்சி மன்றக் கட்டடங்களும், மேலும் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ. 18 லட்சத்தில் 3 நூலகக் கட்டடங்களும், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ. 20 லட்சத்தில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாடு, பொதுப் பணித் துறை சார்பில் ரூ. 15.59 கோடியில் அரியலூர் மாவட்ட ஆட்சியர், வருவாய் அலுவலர் முகாம் அலுவலகம், அரசுக் குடியிருப்புக் கட்டடங்கள், அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள், விடுதிக் கட்டடங்கள் உள்ளிட்ட 22 கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த 525 குடியிருப்புகளுக்கு ரூ. 44 கோடியில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், நெடுஞ்சாலைத் துறை சார்பில் ரூ. 6.13 கோடியில் 6 புதிய பாலங்கள், ரூ. 7 லட்சத்தில் வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் குடிநீர்த் திட்டம், கல்வித் துறை சார்பில் ரூ. 13.3 கோடியில் துவக்கப் பள்ளிக் கட்டடங்கள், நடுநிலை, உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் என 15 புதிய கட்டடங்கள் தற்போது திறந்துவைக்கப்பட்டுள்ளன.

இந்த விழாவில் 1,600 மகளிர் சுயஉதவிக் குழு பெண்களுக்கு அரசு மானியம் ரூ. 10 ஆயிரத்துடன் கூடிய வங்கிக் கடனாக ரூ. 80 லட்சமும், 750 சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 7.5 கோடி கடனாகவும் வழங்கப்படுகிறது என்றார் ஸ்டாலின்.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் த. ஆபிரகாம் தலைமை வகித்தார். மத்திய தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ஆ. ராசா, மத்திய இணை அமைச்சர் நெப்போலியன், தமிழக வனத் துறை அமைச்சர் என். செல்வராஜ், எம்எல்ஏக்கள் பாளை து. அமரமூர்த்தி (அரியலூர்), எஸ்.எஸ். சிவசங்கர் (ஆண்டிமடம்), ரவிக்குமார் (காட்டுமன்னார்குடி), மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் எஸ். சிவசுப்பிரமணியன், தா.பழூர் ஒன்றியக் குழுத் தலைவர் க.சொ.க. கண்ணன், தேளூர் ஊராட்சித் தலைவர் ஆர். காமராஜ் உள்ளிட்டோர் பேசினர்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் ஜெ. பெல்லா வரவேற்றார். மகளிர் திட்ட அலுவலர் ரா. வசந்தி நன்றி கூறினார்.

### தனியார் வியாபாரிகளிடம் குவியும் சம்பா நெல்

நமது நிருபர்First Published : 06 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 06 Feb 2010 02:29:39 AM IST



கடலூர், பிப்.5: கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் கொள்முதலில் தனியார் வியாபாரிகள் தீவிரமாக ஈடுபட்டு உள்ளதால் சன்னரக நெல் முழுவதும் தனியார் வியாபாரிகளிடம் குவிந்த வண்ணம் உள்ளன.

கடலூர் மாவட்டத்தில் காவிரி பாசனப் பகுதிகள் 1.5 லட்சம் ஏக்கர் உள்ளிட்ட 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு இருந்தது.

ஜனவரி 2-வது வாரத்தில் அறுவடை தொடங்கியது. இதுவரை 50 சதவீதம் பகுதிகளில் நெல் அறுவடை முடிந்து விட்டது.

நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் 114 இடங்களில் அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

இவற்றில் சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1100 ஆகவும் மற்ற ரகங்கள் ரூ. 1050-க்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

ஆனால் அரசு கொள்முதல் நிலையங்களை விட விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடமே அதிகமாக நெல் விற்பனை செய்கின்றனர். தனியார் வியாபாரிகள் பலர் களத்துக்கே சென்றும், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும் நெல் கொள்முதல் செய்கின்றனர்.

வியாழக்கிழமை சிதம்பரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நெல் விலை குவிண்டால் ரூ. 950 முதல் 1,250 வரையிலும், விருத்தாசலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிண்டால் ரூ. 928 முதல் ரூ. 1,300 வரையிலும், விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிண்டால் ரூ. 970 முதல் ரூ. 1,060 வரையிலும், திருச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 1,000 முதல் ரூ. 1,600 வரையிலும் தனியார் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடலூர் மாவட்டத்தில் சுமார் 1 லட்சம் ஏக்கரில் நெல் அறுவடை முடிந்துவிட்டது. இதில் இருந்து ஏறத்தாழ 2 லட்சம் டன் நெல் கிடைத்து இருக்கிறது.

அரசு நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக கடந்த ஆண்டு சம்பா பருவத்தில் 60 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்ய்யப்பட்டது.

இந்த ஆண்டு 30 ஆயிரம் டன் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, வெள்ளிக்கிழமை வரை 8 ஆயிரம் டன் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது என்று, நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் மிகச்சன்ன ரகங்களான பொன்னி, பிபிடி நெல் அரசு கொள்முதல் நிலையங்களுக்கு வருவதே இல்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

எனவே அரசு அறிவித்த விலையைவிட சற்று கூடுதலான விலை கொடுத்து, தனியார் வியாபாரிகள் சன்னரக நெல் முழுவதையும் அள்ளிச் செல்கிறார்கள் என்பதே உண்மை.

ஆண்டுதோறும் ஜனவரி 15-ம் தேதிக்கு மேல் அரிசி விலை குறையத் தொடங்கும். ஆனால் சந்தையில் சன்னரக அரிசி கிலோ ரூ. 32-க்கு கீழ் குறையவே இல்லை. இந்தியாவின் ஆண்டு அரிசித் தேவை 890 லட்சம் டன். இதில் 2009-2010-ம் ஆண்டில் 70 லட்சம் டன் உற்பத்திக் குறைவால் பற்றாக்குறை என்றும், இந்த நிதி ஆண்டில் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்றும் மத்திய அரசு அறிவித்து இருக்கிறது.

அரசு நெல் கொள்முதல் அளவு அதிகரித்தால்தான் அரிசி விலையேற்றத்தைக் கட்டுக்குள் வைத்து இருக்க முடியும்.

ஆனால் சம்பா பருவத்தில் தனியார் வியாபாரிகள் சிறந்த ரக நெல் முழுவதையும் அள்ளிச் செல்வது பதுக்கல் மற்றும், விலை ஏற்றத்துக்குத்தான் வழிவகுக்கும் என்று நுகர்வோர் தெரிவிக்கிறார்கள்.

விவசாயிகள் தனியார் வியாபாரிகளிடம் நெல் விற்பது ஏன்? என்று கேட்டதற்கு பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறியது:

விலை கூடுதலாகக் கிடைக்கிறது. அரசு கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு செல்ல வாகன வசதி, சாக்குகள் வேண்டும்.

நன்றாக தூற்றி காய்ந்த நெல்லைத்தான் எடுப்பார்கள். ஆனால் தனியார் வியாபாரிகள் களத்துக்கே சாக்குகளுடன் வந்து, இயந்திரம் மூலம் அறுத்து, நெல் ஈரமாக இருந்தாலும் எடுத்துக் கொள்கிறார்கள்.

நெல் விளைவிக்க ஏக்கருக்கு ரூ. 18 ஆயிரம் செலவாகிறது. ஒரு ஏக்கரில் விளையும் நெல்லுக்கு பெரும்பாலும் அரசு கொள்முதல் நிலையங்களில் கிடைக்கும் விலை ரூ. 18 ஆயிரம்தான்.

ஆனால் தனியார் வியாபாரிகளிடம் ரூ. 21,750 கிடைக்கிறது. அலைச்சலும் இல்லை.நெல் விலை குவிண்டாலுக்கு ரூ. 1,476 என அரசு நிர்ணயித்தால்தான் கட்டுப்படி ஆகும் என்றார் ரவீந்திரன்.

**விலைவாசி குறையும்: மன்மோகன் சிங்**

First Published : 06 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 06 Feb 2010 02:32:18 AM IST



**புது தில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங்.**

புது தில்லி, பிப். 5: தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால் இன்னும் சில வாரங்களில் விலைவாசி குறையும் என பிரதமர் மன்மோகன் சிங் உறுதிபடத் தெரிவித்தார்.

காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம் புது தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமை வகித்தார்.

"மாநில முதல்வர்களை கலந்தாலோசித்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக விலைவாசி குறைவதை இன்னும் சில வாரங்களில் கண்கூடாக காணலாம்' என பிரதமர் பேசியதாக கூட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான மணிசங்கர் அய்யர் கூறினார்.

விலைவாசியைக் கட்டுப்படுத்த தங்கள் மாநிலங்களில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் விளக்கினர்.

பதுக்கல் நடவடிக்கை மற்றும் கள்ளச் சந்தையில் பொருள்கள் விற்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அசாம் முதல்வர் தருண் கோகோய் கூறினார்.

தெலங்கானா விவகாரம்: தெலங்கானா விவகாரம் குறித்தும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஸ்ரீகிருஷ்ணா கமிட்டியின் வரன்முறை விரைவில் முடிவு செய்யப்படும் என ப.சிதம்பரம் கூட்டத்தில் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி, சுகாதாரத் துறை அமைச்சர் குலாம் நபி ஆசாத், கட்சி பொதுச் செயலர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ராகுல் பங்கேற்கவில்லை: காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் காந்தி மும்பையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதால் இக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

மகாராஷ்டிர முதல்வர் அசோக் சவாண், ராகுல் காந்தியுடன் சென்றதால் அவரும் இக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இன்று முதல்வர்கள் கூட்டம்: விலைவாசி உயர்வால் மக்கள் கடும் அதிருப்தி அடையும் முன் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ள நிலையில், இது குறித்து விவாதிப்பதற்காக மாநில முதல்வர்களின் கூட்டத்தை பிரதமர் மன்மோகன் சிங் சனிக்கிழமை கூட்டியுள்ளார்.

மாநிலங்களில் செயல்படுத்தப்படும் பொது விநியோகத் திட்டம் குறித்தும், வேளாண் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பது குறித்தும் இந்த வாரத் தொடக்கத்தில் அனைத்து மாநில தலைமைச் செயலர்களிடமும் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தினார்.

கடந்த சில மாதங்களாக அத்தியாவசியப் பொருள்களின் கடும் விலை உயர்வு ஐக்கிய முற்போக்கு கூட்டணிக்கு பெருத்த தலைவலியை உண்டாக்கியுள்ளது.

அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், சர்க்கரை, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வந்ததால் பணவீக்க விகிதம் 20 சதவீதத்தைத் தொட்டு ஜனவரி கடைசியில் 17.56 சதவீதமாக இருந்தது.

பதுக்கல்காரர்களை ஒழிப்பதிலும், பொது விநியோகத் திட்டத்தை தவறுகள் நிகழாவண்ணம் செம்மையாக நடைமுறைப்படுத்துவதிலும் மாநில அரசுகள் கவனம் செலுத்த வேண்டும் என காங்கிரஸ் எம்.பி.க்கள் கூட்டம் அண்மையில் கேட்டுக் கொண்டது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என காங்கிரஸ் தலைவர்கள் சிலர் வெளிப்படையாகவே குறை கூறினர். இதனால் கூட்டணிக்குள் குழப்பம் ஏற்படும் நிலை தோன்றியது.

நிலைமையை தாற்காலிகமாக சமாளிப்பதற்காக குடும்ப அட்டைதாரர்களுக்கு வழக்கத்தைவிட 10 கிலோ கூடுதலாக அரிசி அல்லது கோதுமை வழங்க மத்திய அரசு உத்தரவிட்டது.

விலைவாசி உயர்வு பெரும் கவலை அளிக்கக் கூடிய விஷயம் என்றும், இது குறித்து பிரதமருடன் பேசியுள்ளதாக அண்மையில் கட்சித் தொண்டர்களுக்கு எழுதிய கடிதத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு முன்னர், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது தொடர்பான காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம் கடந்த ஆகஸ்டில் நடைபெற்றது.

அப்போது கட்சித் தலைவர்களும், அரசுப் பொறுப்பில் உள்ளவர்களும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முடிவு எடுக்கப்பட்டது.

### கோழிகளுக்கான தடுப்பூசி முகாம்

First Published : 06 Feb 2010 10:38:29 AM IST

அரவக்குறிச்சி பிப். 5: கரூர் மாவட்டம், பள்ளபட்டியில் கோழிகளுக்கு கழிசல் நோய் தடுப்பூசி போடும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமை அரவக்குறிச்சி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஏ. கலீலூர் ரகுமான் தலைமைவகித்துத் தொடக்கிவைத்தார். பள்ளப்பட்டி பேரூராட்சித் தலைவர் டி.எம். பசீர் அகம்மது முன்னிலை வகித்தார்.

கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சக்திவேல், டாக்டர் செந்தில் முத்துக்குமார் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழுவினர், சுமார் 100 கோழிகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

பின்னர், இணை இயக்குநர் சக்திவேல் கூறியது:

கோழிகளுக்கு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கழிசல் நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த நோய்த் தாக்கிய கோழிகள் இறந்துவிடும்.

எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முகாம் நடத்தப்பட்டது.

ஒரு முறை தடுப்பூசி போட்டால் 6 மாதங்கள் வரை கோழிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றார் அவர்.

### மேட்டூர் அணை: 77.08 அடி

First Published : 06 Feb 2010 10:19:52 AM IST
Last Updated :

தஞ்சாவூர், பிப். 5: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 77.08 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 868 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 2,000 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது.

கல்லணையில் இருந்து டெல்டா மாவட்டப் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

### தஞ்சை மாவட்டத்தில் விவசாய கல்லூரி தொடங்க வலியுறுத்தல்

First Published : 06 Feb 2010 10:18:45 AM IST

தஞ்சாவூர், பிப். 5: தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படும் தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு விவசாயக் கல்லூரி தொடங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு திரிணாமூல் காங்கிரஸ் மாவட்டச் செயலர் எஸ். அன்பழகன் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 24 சதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு எந்தப் பிடித்தமுமின்றி பணம் பட்டுவாடா செய்ய வேண்டும். தரமற்ற விதை, மழை, வெள்ளம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளைச் சுகாதாரமாகப் பராமரித்து, தேவையான அனைத்து மருந்துகளும் தட்டுப்பாடின்றி கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நகரில் அதிகரித்து வரும் கொள்ளை, திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க காவல் துறை கண்காணிப்புடன் செயல்பட வேண்டும்.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பங்கேற்க திரிணாமூல் காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு அழைப்பு அனுப்ப வேண்டும். பெரியகோயில் 1,000-வது ஆண்டு விழா கமிட்டியில் எங்களையும் சேர்க்க வேண்டும். கும்பகோணம் அருகிலுள்ள ராஜராஜன் நினைவிடத்தைச் சீர்படுத்தி, மணிமண்டபம் கட்ட வேண்டும். பாபநாசம் வட்டம் பசுபதிகோயிலில் இருந்து புகழ்பெற்ற வீரசிங்கம்பேட்டை மாரியம்மன் கோயிலுக்குச் செல்லும் தார்ச் சாலையைச் சீரமைக்க வேண்டும்.

## வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் குறைந்த வாடகையில் விவசாய கருவிகள்

First Published : 06 Feb 2010 06:13:25 AM IST

திருவண்ணாமலை, பிப்.5: காஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் விவசாயிகள் கருவிகள் தரும் திட்டம் வெள்ளிக்கிழமை தொடங்கப்பட்டது.

இதற்கான விழா சங்க அலுவலகத்தில் உள்ள வேளாண் சேவை மையத்தில் நடைபெற்றது. மண்டல இணைப்பதிவாளர் ச.சுப்பிரமணியம், மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் மா.குழந்தைவேலு ஆகியோர் திட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.

இதற்காக ரூ.3.5 லட்சத்தில் வேளாண் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. மேலும் விவசாய கூட்டுப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் வேளாண் கருவிகள் வாங்குவதற்கு குறைந்த வட்டியில் ரூ.5 லட்சம் வரை கடனுதவி செய்ய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தயாராக உள்ளது என அறிவிக்கப்பட்டது.

சங்க தனி அலுவலர் ஜி.ரேணு, செங்கம் களமேலாளர் கருணாகரன், செயலர் ஏ.பாலசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## 100 நாள் வேலை திட்டத்தால் விவசாயப் பணிகள் பாதிப்பு: விவசாயிகள் புகார்

First Published : 06 Feb 2010 06:11:57 AM IST

திருவண்ணாமலை, பிப்.5: திருவண்ணாமலை தாலுகாவில் 100 நாள் வேலை திட்டத்தால் வேளாண் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது என விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.

திருவண்ணாமலை வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் தாலுகா அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். பல்வேறு துறை அதிகாரிகள், விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், நூறு நாள் வேலை திட்டத்தால் வேளாண் பணிகளுக்கு ஆள்கள் கிடைப்பதில்லை. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றார் விவசாயி சற்குணன்.

எடப்பாளையம் வழியாக செல்லும் டி-5 நகர பேருந்து திருவண்ணாமலையில் இருந்து அதிகாலை 5 மணிக்கு இயக்கப்படுகிறது. அதை மாற்றி 6 மணிக்கு இயக்க வேண்டும். இதனால் 5 கிராம மக்கள் பயன்படுவர் என்றார் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி அழகேசன்.

சொரகொளத்தூர் கிராமத்துக்கு கிராம நிர்வாக அதிகாரியை சரியாக வருவதில்லை. இதனால் பல்வேறு சான்றிதழ்கள் கோரி வரும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர் என்றார் விவசாயி காமராஜ். மேலும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து விவசாயிகள் பேசினர்.

## உரக்கிடங்கில் இயங்கும் தோட்டக்கலைத் துறை அலுவலகம்

First Published : 06 Feb 2010 12:11:50 AM IST
Last Updated :

உளுந்தூர்பேட்டை, பிப். 5: உளுந்தூர்பேட்டையில் தனி அலுவலகம் இல்லாததால் உரக் கிடங்கையே தோட்டக் கலைத் துறை அலுவலகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

÷இங்கு உதவி இயக்குநர் தலைமையில் 4 உதவி வேளாண் அலுவலர்கள் பணியாற்றிய போதும் தோட்டக் கலைத் துறைக்கு என்று தனியாக அலுவலக கட்டடம் இல்லாதது பெருங்குறையாகும். இதனால், இவர்கள் இங்குள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையத்தின் விவசாய உரக் கிடங்கை அலுவலகமாகப் பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. உரக் கிடங்கில் உள்ள ஒரு அறையில் கணினி வசதியுடன் நாற்காலி, மேஜைகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், அவற்றை வைப்பதற்கான அலுவலகத்துக்கான இடவசதி ஏற்படுத்தி தரவில்லை. இதனால், இவை அனைத்தும் ஒரே இடத்திலேயே முடங்கிக் கிடக்கின்றன. இந்த உரக் கிடங்கில் பணியாற்றும் அலுவலர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். மேலும், விவசாயிகளுக்கான மானியப் பொருள்களான உரம், விதை, கருவிகள் போன்றவற்றை பாதுகாப்பாக வைத்திருக்க தனியாக கிடங்கு வசதி இல்லை.

÷இதனால், ஒரு சில முக்கியப் பொருள்கள் மட்டுமே வட்டார வேளாண் விரிவாக்க மையத்தின் கிடங்கில் வைக்கப்படுகின்றன. பயிர்களுக்கு தேவையான உரங்களோ பாதுகாப்பின்றி வட்டார வேளாண் விரிவாக்க மைய வளாகத்திலேயே வைக்கப்படும் நிலை உள்ளது. இதனால், அவை திருடுப்போவதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

**விவசாயிகள் சங்க மாநில மாநாடு**

First Published : 06 Feb 2010 09:46:35 AM IST

திருச்சி, பிப். 5: தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் 24-வது மாநில மாநாட்டை வரும் ஏப். 11, 12, 13 தேதிகளில் கிருஷ்ணகிரியில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திருச்சியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் மாநிலக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்துக்கு, சங்கத்தின் துணைத் தலைவரும், முன்னாள் எம்எல்ஏவுமான சோ. ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலர் டாக்டர் வே. துரைமாணிக்கம், துணைச் செயலர்கள் எம். ஆறுமுகம், த. இந்திரஜித், துணைத் தலைவர் சி.எம். துளசிமணி, மாவட்டச் செயலர்கள் பி.எஸ். மாசிலாமணி (திருவாரூர்), ஏ. பன்னீர்செல்வம் (தஞ்சை), சிவசூரியன் (திருச்சி), குருசாமி (கரூர்) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

மரபணு மாற்ற கத்தரிக்காய் குறித்து அரசு தெளிவான முடிவெடுக்கும் வரை தமிழகத்தில் விற்பனை செய்யக் கூடாது என்ற முதல்வரின் உத்தரவை விவசாயிகள் சங்கம் வரவேற்கிறது. பிடி கத்தரிக்காய் உள்ளிட்ட மரபணு மாற்றம் செய்யப்பட்ட எந்த காய்கறி, தானிய வகைகளையும் அனுமதிக்கக் கூடாது.

இதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்.

மானாமதுரையில் வைகை தண்ணீரைத் திறந்து விடக் கோரி விவசாயிகள் நடத்திய போராட்டத்தின் போது, போலீஸôர் தடியடி நடத்தியதை இந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

சம்பந்தப்பட்ட போலீஸôர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் பாசன வடிகால்களைத் தூர்வாரும் பணிகளை ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் தொடங்கி மே மாதத்தில் முடிக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் காலம்கடந்து இப்பணியைத் தொடங்குவதால், மழை வெள்ளக் காலங்களில் தண்ணீர் முறையாக வடியாமலும், சாகுபடிக் காலங்களில் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காமலும் மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே, வடிகால் மற்றும் வாய்க்கால்களைத் தூர்வாரும் பணியை உரிய காலத்தில் தொடங்க வேண்டும்.

அகில இந்திய விவசாயிகள் சங்கம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவுபெறும் பவள விழா ஆண்டையொட்டி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க 24-வது மாநில மாநாட்டை வரும் ஏப்ரல் 11, 12, 13 ஆகிய தேதிகளில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 25 பண்ணை மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு விவசாயக் கருவி

First Published : 06 Feb 2010 06:27:49 AM IST
Last Updated :

கிருஷ்ணகிரி, பிப்.5: கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் ஊராட்சியில் உள்ள பண்ணை மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு களை எடுக்கும் கருவி மற்றும் பயிர் நடவு செய்வதற்கான அளவீடு கருவிகளை ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் ஆதி மகேந்திரன் வழங்கினார்.

காவேரிப்பட்டணம் பகுதிகளில் நடப்பு நவரை பருவத்தில் 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. டான்வாபி பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் விவசாயிகள் விருப்பக் குழுக்கள் அமைக்கப்பட்டு வேளாண்மை சார்ந்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நடப்பு ஆண்டில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 டான்வாபி பண்ணை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.6,200 மதிப்பிலான 5 கோனாவீடார் களை எடுக்கும் கருவிகளும், ஒரு பயிர் நடவு அளவீடு கருவியும் மானியத்துடன் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும், கோனாவீடார் களை எடுக்கும் கருவி மற்றும் பயிர் நடவு அளவீடு கருவிகளின் முக்கியவத்துவம் குறித்து உதவி இயக்குநர் ராமமூர்த்தி

விவசாயிகளுக்கு விளக்கினார்.

## வேளாண் இயக்கக் கண்காட்சி

First Published : 06 Feb 2010 10:28:26 AM IST
Last Updated :

புதுக்கோட்டை, பிப். 5: புதுக்கோட்டையில் ராபி பருவ முனைப்பு இயக்கக் கண்காட்சி மற்றும் மூன்று நாள் கருத்தரங்கு நிறைவு விழா புதன்கிழமை நடைபெற்றது.

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) சார்பில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கின் நிறைவு விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமை வகித்தார். பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் சிறந்த அரங்காக தேர்ந்தெடுக்கப்பட்ட அரங்குகளின் அமைப்பாளர்களுக்கு அவர் பரிசளித்தார்.

சிறந்த அரங்குகளுக்கான முதல் மூன்று பரிசுகளை முறைய வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதைச்சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை ஆகியவை வென்றன.

சிறப்புப் பரிசுகளை வேளாண் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தாட்கோ ஆகியவை வென்றன.

இதேபோல, தனியார் நிறுவனங்கள் அமைத்திருந்த அரங்குகளில் புதுக்கோட்டை ஸ்ரீராம் அக்ரி கிளினிக் நிறுவனம், திருச்சி ஜெயின் இரிகேசன் நிறுவனம், மான்சாண்டோ நிறுவனம் ஆகியவை வென்றன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுவினருக்கான அரங்குகளுக்கான பரிசுகளை புதுக்கோட்டை கிரீன் பவுண்டேஷன், கல்லுக்குடியிருப்பு செவ்வந்தி சுய உதவிக் குழு, கேர் தொண்டு நிறுவனம் ஆகியவை வென்றன.

வேளாண் விளைபொருள் போட்டியில் மழையூர் விவசாயி மா. சாந்தார், கல்லுமடை விவசாயி முஹம்மதுஅலி, கோட்டைக்காடு விவசாயி செபஸ்தியான் ஆகியோர் முறையே முதல் மூன்று பரிசுகளையும் கலியமுத்துவயல் விவசாயி க. வடிவேல் சிறப்புப் பரிசையும் வென்றனர்.

தோட்டக்கலை விளைபொருள் போட்டியில், வடகாடு விவசாயி ரெ. விடங்கன், வாண்டாகோட்டை விவசாயி ரா. நடேசன், மழையூர் மா. சாந்தார் ஆகியோர் முறையே முதல் மூன்று பரிசுகளையும் வாகவாசல் விவசாயி க. ரெங்கையா சிறப்புப் பரிசையும் வென்றனர்.

மேலும், வேளாண் துறை இணை இயக்குநர் பா. கிருஷ்ணசாமி, துணை இயக்குநர் வேளாண் வணிகம் தி. தங்கவேல், விதைச்சான்று உதவி இயக்குநர் நா. அண்ணாமலை, ஆத்மா மாவட்ட இணைப்பு அலுவலர் ரெ. சந்தானம், உதவி இணைப்பு அலுவலர் ஆர். ஜெகதீஸ்வரி ஆகியோருக்கு நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டன.

மூன்று நாள்கள் நடைபெற்ற ராபி பருவ முனைப்பு இயக்க கருத்தரங்கில் மாவட்டம் முழுதும் இருந்து 2200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இதில், 20-க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்களின் கருத்துரை அமர்வுகள் நடைபெற்றன.

மாவட்ட ஊராட்சித் தலைவர் சி. முத்துச்சாமி, தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மாவட்ட ஆலோசகர் பெரி. திருப்பதி, மேலப்பனையூர் விவசாயி ராமதீர்த்தார் உள்ளிட்டோர் பேசினர்.

முன்னதாக, த்மா திட்ட இயக்குநர் பா. கிருஷ்ணசாமி வரவேற்றார். விதைச்சான்று உதவி இயக்குநர் நா. அண்ணாமலை நன்றி கூறினார்.

**விதை கிராம திட்ட பயிற்சி**

First Published : 06 Feb 2010 12:39:55 AM IST
Last Updated :

மதுராந்தகம்,பிப்.5: அச்சிறுபாக்கம் உதவி வேளாண்மை அலுவலகம் சார்பில் விதை கிராம திட்ட விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் வடமணிபாக்கம் கிராமத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமில்,வேளாண்மை அலுவலர் கிருஷ்ணகுமாரி, திட்டங்களைப் பற்றியும், துணை வேளாண்மை அலுவலர் அருள்தாஸ் வேளாண்மை தொழில் நுட்பங்களை பற்றியும், விதை சான்று அலுவலர் பிரபாகரன், விதை உற்பத்தி பற்றியும் எடுத்துரைத்தனர்.

அச்சிறுபாக்கம் எம்எல்ஏ சங்கரிநாராயணன், இம் முகாமில் கலந்து கொண்ட 50 விவசாயிகளுக்கும் 20 கிலோ ஏடிடி நெல்லும், நெல் நுண்ணூட்ட உரம் ஆகியவற்றை வழங்கினார்.

முகாமிற்கு, வடமணிப்பாக்கம் ஊராட்சி மன்ற பெரியநாயகம் தலைமை தாங்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் கோ.சந்திரசேகரன் வரவேற்றார். மாவட்டத் தொலைபேசிக் குழு உறுப்பினர் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பயறுவகை பயிர்கள்: இலைகளில் கூட்டு நுண்ணூட்டச் சத்து கரைசல் தெளிக்க வேண்டுகோள்

First Published : 05 Feb 2010 11:34:41 AM IST
Last Updated :

சிவகங்கை, பிப்.4: பயறுவகை பயிர்களில் அதிக மகசூல் கிடைக்க இலைகளில் கூட்டு நுண்ணூட்டச் சத்து கரைசலைத் தெளிக்க வேண்டும் என சிவகங்கை உழவர்பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குநர் (பொறுப்பு) லயோலா அன்புக்கரசி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியிருப்பது:

உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு போன்ற பயறுவகைப் பயர்களில் விதைத்த 25 முதல் 35 நாள்களில் பூப்பூத்து காய்பிடிக்கும். தற்போது காய்பிடிக்கும் சமயம் ஆகும்.

இந்த நேரத்தில் பயிர்களுக்கு அதிக தளைச்சத்து தேவைப்படுகிறது. குறுகிய காலத்தில் தேவையான சத்தை கொடுக்க வேண்டியிருப்பதால் அந்த சத்தினை இலைவழியாக ஊட்டமாக பயிருக்கு தெளித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

கூட்டு நுண்ணூட்டச் சத்து என்பது டிஏபி, அமோனியம் சல்பேட், மற்றும் போரக்ஸ் கலந்த கலவையாகும். ஒரு எக்டேர் பயிருக்கு தெளிக்க 2.5 கிலோ டிஏபி, 1 கிலோ அமோனியம் சல்பேட், அரை கிலோ போரக்சை 37 லிட்டர் தண்ணீரில் 12 மணி நேரம் ஊற வைக்க வேண்டும்.

பின்னர் வடிகட்டினால் 35 லிட்டர் கரைசல் கிடைக்கும். இதனுடன் 465 லிட்டர் தண்ணீர் கலந்து கிடைக்கும் 500 லிட்டர் கரைசல் ஒரு ஹெக்டேர் பரப்பில் தெளிக்க போதுமானதாகும்.

இந்த கரைசலை காய் பிடிக்கும் சமயம் அல்லது விதைத்த 25 முதல் 35 நாள்களில் தெளிக்க வேண்டும். இதனால் பூ உதிர்வது தடுக்கப்பட்டு அதிகளவில் காய் பிடிப்பதுடன் திரட்சியான மணிகள் தோன்றும்.

எனவே விவசாயிகள் பயறுவகை பயிர்களுக்கு ஒருங்கிணைந்த பயிர் ஊக்கி தெளித்து மகசூலை பெருக்கி பயன்பெறுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சுனாமியை முன்கூட்டியே கண்டறியும் மாதிரி கருவி

First Published : 06 Feb 2010 10:46:58 AM IST
Last Updated :

கோவை, பிப்.5:தமிழ்நாடு அறிவியல் இயக்கமும், கோவை கேபிஆர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து நடத்திய அறிவியல் கண்காட்சியில் இடம்பெற்ற சுனாமியை முன்கூட்டியே கண்டறியும் மாதிரி கருவி பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

மாநில அளவிலான 2 நாள் அறிவியல் கண்காட்சியில் 70}க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவியர், தங்களது அரிய அறிவியல் கண்டுபிடிப்புகளைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கண்காட்சியை ஊரகத் தொழில்துறை அமைச்சர் பொங்கலூர் நா.பழனிசாமி வெள்ளிக்கிழமை துவக்கி வைத்தார்.

கண்காட்சியில் இடம்பெற்ற வெள்ளானைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவர்கள் இணைந்து உருவாக்கிய சுனாமி வந்தால், ஒலி எழுப்பி மக்களை

எச்சரிக்கிற மாதிரி கருவியின் செயல்பாடு பார்வையாளர்களை ஆச்சரியப்பட வைத்தது.

ஆழ்கடலில் ஒரு மின்கடத்தியும், அதனுடன் இணைக்கப்பட்ட மற்றொரு மின்கடத்தி சாதாரண அலைகளுக்கு எட்டாத உயரத்தில் வைக்கப்படும். சுனாமி வரும்போது எழும்பும் பேரலைகள் உயரத்தில் வைக்கப்பட்டுள்ள மின்கடத்தியைத் தொட்டவுடன் எச்சரிக்கை மணி ஒலிக்கத் துவங்கும். இதனால், சுனாமியின் தாக்குதலை முன்கூட்டியே தெரிந்து கொள்ள முடியும்.

காற்று, நீர், நிலம் மாசுபாட்டை கட்டுப்படுத்தும் ஏராளமான மாதிரி கருவிகள் கண்காட்சியில் இடம்பெற்றன.

சுற்றுச் சூழல் மாசுபாடு இல்லாமல் கருவிகளை எப்படி இயக்குவது தொடர்பான மாதிரிகளையும் மாணவர்கள் உருவாக்கியுள்ளனர்.

நாமக்கல் மாவட்டம் கொங்கு மெட்ரிக் பள்ளி மாணவியர் வடிவமைத்த ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டால், செல்போன்களை சார்ஜ் செய்யும் நவீன கருவி கண்காட்சியை அலங்கரித்தது.

பெட்ரோலில் இயங்கும் மோட்டார் வாகனங்களைவிட பேட்டரியில் செயல்படும் வாகனங்களைப் பயன்படுத்துதன் மூலம் சுற்றுச் சூழல் மாசுபாடு வெகுவாகக் குறையும் என கண்காட்சியின் வாயிலாக மாணவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், ஓசோன் படலத்தின் முக்கியத்துவம் குறித்தும், அதில் ஓட்டை விழுந்தால், மனிதனுக்கும், பிற உயிரினங்களுக்கும் ஏற்படும் தீங்கு தொடர்பாக விளக்கும் வரைப்படங்களும் காண்போரை அச்சப்பட செய்தது.

இந்தக் கண்காட்சியை மொத்தம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பார்வையிட்டுள்ளனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க பொதுச்செயலர் எஸ்.டி.பாலகிருஷ்ணன், மாநிலப் பொருளாளர் ஸ்டீபன், செயலர் சுப்பிரமணியம், மாவட்டத் தலைவர் பி.நடராஜன் ஆகியோர் பங்கேற்றனர்.

### கோழிகளுக்கான தடுப்பூசி முகாம்

First Published : 06 Feb 2010 10:38:29 AM IST
Last Updated :

அரவக்குறிச்சி பிப். 5: கரூர் மாவட்டம், பள்ளபட்டியில் கோழிகளுக்கு கழிசல் நோய் தடுப்பூசி போடும் முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமை அரவக்குறிச்சி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.ஏ. கலீலூர் ரகுமான் தலைமைவகித்துத் தொடக்கிவைத்தார். பள்ளப்பட்டி பேரூராட்சித் தலைவர் டி.எம். பசீர் அகம்மது முன்னிலை வகித்தார்.

கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சக்திவேல், டாக்டர் செந்தில் முத்துக்குமார் உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவக் குழுவினர், சுமார் 100 கோழிகளுக்கு தடுப்பூசி போட்டனர்.

பின்னர், இணை இயக்குநர் சக்திவேல் கூறியது:

கோழிகளுக்கு பிப்ரவரி, மார்ச் மாதங்களில் கழிசல் நோயின் தாக்கம் அதிகமாக இருக்கும். இந்த நோய்த் தாக்கிய கோழிகள் இறந்துவிடும்.

எனவே, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முகாம் நடத்தப்பட்டது.

ஒரு முறை தடுப்பூசி போட்டால் 6 மாதங்கள் வரை கோழிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்றார் அவர்.

### பி.டி. கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 06 Feb 2010 06:07:50 AM IST
Last Updated :

வேலூர், பிப். 5: மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில துணைச் செயலர் எஸ்.தயாநிதி தலைமை வகித்தார். மாவட்டப் பொருளாளர் ஆர்.குப்புசாமி, மாவட்டத் தலைவர் டி.சந்திரன், மாவட்டச் செயலர் கே.சாமிநாதன், மாவட்ட துணைத் தலைவர் என்.பிச்சுமணி, மாவட்ட துணைச் செயலர் எல்.சி.மணி உள்ளிட்டோர் பேசினர்.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை அனுமதிப்பது குறித்த கருத்துக் கேட்புக் கூட்டங்களை தமிழகத்தில் நடத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தினமலர்

பருவ நிலை விஞ்ஞானி பச்சோரிக்கு முழு ஆதரவு : கார்பன் வெளியேற்றம் குறைக்க யோசனை



புதுடில்லி : "பருவ நிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கு இடையேயான அமைப்பு (ஐ.பி.சி.சி.,) நடவடிக்கைகள் மீது முழு நம்பிக்கை உள்ளது; விஞ்ஞானி பச்சோரிக்கு முழு ஆதரவு உண்டு' என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். ஐ.பி.சி.சி., வெளியிட்ட அறிக்கையில், புவி வெப்பமயமாதலால், இமயமலைப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகி, வரும் 2035ம் ஆண்டு காணாமல் போகுமென அறிக்கை வெளியிட்டு, பலவித சர்ச்சைகளுக்கு ஆளானவர் ஆர்.கே.பச்சோரி. இவரது தலைமையிலான ஐ.பி.சி.சி.,க்கு ஆதரவளிப்பதாக பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

இதுகுறித்து, எரிசக்தி ஆய்வு மையம் ஏற்பாடு செய்த, டில்லி நீடித்த வளர்ச்சி மாநாட்டை துவக்கி வைத்து பேசிய பிரதமர் கூறியதாவது: பருவ நிலை மாற்றம் தொடர்பான விவகாரத்தில் உலகளவிலான ஒருமித்த கருத்து எட்டாதது, வருந்தத்தக்கது. எதிர்காலத்தில் அதிகளவிலான கார்பன் வெளியீட்டை கட்டுப்படுத்த, தொழிற்சாலைகள் நிறைந்த நாடுகள் தைரியமான முடிவுகளை எடுக்க வேண்டும்; குறிப்பாக வரலாற்று ரீதியாக, இதற்கு பொறுப்பு வாய்ந்த வளர்ச்சியடைந்த நாடுகள், துணிச்சலான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரம், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளும், தங்களால் இயன்ற அளவு கார்பன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

பருவ நிலை மாற்றத்தால் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் சிறிய தீவுகள் மீது, தீவிர கவனம் செலுத்த வேண்டும். இந்தியா, வரும் 2020ம் ஆண்டுக்குள் 20 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையிலான கார்பன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துவதாக ஏற்கனவே அறிவித்துள்ளது. அதேபோல், நாட்டில் இருந்து வறுமையை ஒழிக்கவும் தீர்மானித்துள்ளது. அதற்கு நிலையான வளர்ச்சியடைய வேண்டியது அவசியம். பருவ நிலை மாற்றத்திற்கான அரசுகளுக்கு இடையேயான அமைப்பான (ஐ.பி.சி.சி.,), இமயமலைப் பகுதிகளில் காணப்படும் பனிமலைகள் உருகி காணாமல் போகும் என அறிக்கை வெளியிட்டு பலவித சர்ச்சைகளுக்கு ஆளானது. இந்த குற்றச்சாட்டுகளால், அந்த அமைப்பு மேற்கொண்ட பல்வேறு பணிகளை குறைத்து மதிப்பிட முடியாது.

ஐ.பி.சி.சி.,யின் நடவடிக்கைகள் மற்றும் அதன் தலைமை மீது இந்தியாவிற்கு முழு நம்பிக்கை உள்ளது. இந்தியா ஐ.பி.சி.சி.,க்கு ஆதரவளிக்கும் எரிசக்தி ஆய்வு மையமான, "டெரி' பச்சோரியின் தலைமையின் கீழ், எரிசக்தி பாதுகாப்பு மற்றும் பருவ நிலை மாற்றம் ஆகிய இரண்டு சவால்களை எதிர்கொள்வதற்கான பங்களிப்பில், மிகுந்த மரியாதை மற்றும் சர்வதேச அளவிலான பாராட்டை பெற்றது. வரும் 2022ம் ஆண்டு, 20 ஆயிரம் மெகா வாட் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட சூரிய சக்தி திட்டம் ஒன்று, தேசிய செயல் திட்டத்தின் கீழ் துவக்கப்பட்டுள்ளது. அதே போன்று, தேசியளவிலான மேம்படுத்தப்பட்ட எரிசக்தி திறனுக்காக, தேசியளவிலான திட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படும். அதன் மூலம் கார்பன் வெளியீடு பெருமளவு கட்டுப்படுத்தப்படும். இவ்வாறு பிரதமர் கூறினார்.

உலகத் தலைவர்கள் ஆதரவு: ஐ.பி.சி.சி., தலைவரான பச்சோரிக்கு பல்வேறு உலகத் தலைவர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். டில்லியில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய பூடான் பிரதமர் ஜிக்மே தின்லி கூறுகையில், "இமயமலைப் பகுதியில் அமைந்துள்ள பனிப்பாறைகள் வரும் 2035ம் ஆண்டு உருகி காணாமல் போகும் என்ற ஐ.பி.சி.சி., யின் அறிக்கையால், பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன. ஆனால், நாங்கள் பூடான் பகுதியில் ஏராளமான சுற்றுச்சூழல் மாற்றங்களை பார்த்து வருவதோடு, அவற்றை உணர்கிறோம்' என பச்சோரிக்கு ஆதரவாக பேசினார். இதே போன்று நார்வே, கிரீஸ், பின் லாந்து நாடுகளைச் சேர்ந்த பிரதமர்களும், புவி வெப்பமயமாதலால் பனிப்பாறைகள் உருகுதல் மற்றும் கடல் மட்டம் உயர் தல் ஆகியவை தொடர்பான ஐ.பி.சி.சி.,யின் அறிக்கைக்கு ஆதரவாக பேசினர்.

## இறால் மீனுக்கு வைரஸ் நோய்: ஏற்றுமதியில் பாதிப்பு

பிப்ரவரி 06,2010,00:00 IST

ராமநாதபுரம்:இறால் மீனுக்கு வைரஸ் நோய் உருவாகுவதால், இதன் ஏற்றுமதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால் மீன்களுக்கு தற்போது வெண்புள்ளி வைரஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் அறிவித்துள்ளது. 2007-08ல் ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 223 டன் இறால் மீன்கள் ஏற்றுமதியாகின. ஆனால், கடந்தாண்டு வெண்புள்ளி வைரஸ் காரணமாக இறால் ஏற்றுமதி ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 42 டன்னாக குறைந்து உள்ளது. வைரஸ் நோயை போக்குவதற்கு, இதுவரை மருந்து கண்டு பிடிக்கவில்லை, என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, நோய் வருமுன் தடுப்பதே இதற்கு சரியான தீர்வாக உள்ளது. இதனிடையே,நோய் தடுப்பதற்காக கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம், இறால் வளர்ப்போருக்கு சில அறிவுரைகளை வழங்கி உள்ளன.

அதில்," இறால் வளர்ப்போர் சரியான விதத்தில் பண்ணையை தயார்படுத்த வேண்டும், நீர் மேலாண்மை, பி.சி.ஆர்.( பாலி மரேஸ் செயின் ரீஆக்சன்) பரிசோதனை செய்யப்பட்ட, வளமான இறால் குஞ்சுகளை பொறிப்பகத்தில் தேர்வு செய்தல், பண்ணை குட்டையில் குறைந்த அளவில் இருப்பு செய்தல், பண்ணை நீர் மாற்றத்தை வெகுவாக குறைத்து விடுதல், சரியான முறையில் தீவனமிடுதல், குழுவாக செயல்படுத்தல் போன்ற வழிமுறைகளால் இறால் மீனணகளை நோயின் தாக்கத்திலிருந்து காக்கலாம்,' என கூறி உள்ளது.

இறால் குஞ்சுகள் வெண்புள்ளி வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிய ,பி.சி.ஆர். ஆய்வு கூடங்கள் இந்தியா முழுவதும் நூற்று கணக்கில் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் 11 ஆய்வுகூடங்களே சரியான விதத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதாக கண்டறியப்பட்டுள்ளது. கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் பரிந்துரை செய்துள்ள ஆய்வு கூடங்களில் மட்டுமே இறால் வளர்ப்போர் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகூடங்கள்: ராம் அக்வா லாப்(கூனிமேடு) சி.பி. அக்வாகல்சர் பிரைவேட் லிட்., (செட்டிக்குளம்) இன்ண்டஸ் அக்வா பி.சி.ஆர். லாப், என்.கே. மெரைன் லாப், சி.பி. அக்வாகல்சர் இந்தியா லிட்., எம்பையோசிஸ் இந்தியா(மரக்கானம்) வைசாகி பையோ மரைன் பி.லிட்., (கைபனிக்குப்பம்) குரோபெஸ்ட் பீட்ஸ்(புதுநடுக்குப்பம்) ஜீனோம்பார் ஷ்ரிம்ஸ் ரிசர்ச் டையாகனஸ்டிக் இன்டிட்டியூட் (பனையூர் ) பாட்லாப் பையோ டெக், (நீலாங்கரை ) ஆசியன் ஆனாலிட்டிகல் லாபரேட்டரீஸ் பி.லிட்.,(பாலவாக்கம்).

## துவரை விளைச்சல் அதிகரிப்பு : விலை குறைய வாய்ப்பு

பிப்ரவரி 06,2010,02:33



ஐதராபாத்: சில்லரைச் சந்தையில் கிலோ 100 முதல் 120 ரூபாய் வரை விற்ற துவரம் பருப்பின் விலை குறையத் துவங்கியுள்ளது. தற்போது கிலோ 70 முதல் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆந்திராவில் தற்போது அதிக அளவில், துவரை பயிரிடப்பட்டுள்ளதால், வரும் நாட்களில் துவரம் பருப்பின் விலை மேலும் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜனவரி முதல் தேதியன்று குவிண்டாலுக்கு 5,000 முதல் 5,280 ரூபாய் வரை விற்ற துவரம் பருப்பு, தற்போது, 3,600 முதல் 4,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அண்டை மாநிலங்களில் இருந்து அதிக அளவில் சந்தைக்கு துவரம் பருப்பு வரும் என்பதால், விலை மேலும் குறையும். அனேகமாக குவிண்டால் 3,500 ரூபாய் என்ற அளவை எட்டலாம்.
கடந்த ஆண்டு ஐதராபாத் சந்தைக்கு 1.50 லட்சம் குவிண்டால் துவரம் பருப்பு மட்டுமே விற்பனைக்கு வந்தது.

இந்த ஆண்டு அந்த அளவு கணிசமாக அதிகரிக்கலாம் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதுதொடர்பாக, வியாபாரி ஒருவர் கூறியதாவது: ஆந்திராவில் கடந்த ஆண்டு 12 ஆயிரத்து 500 ஏக்கர் அளவுக்கு மட்டுமே துவரம் பருப்பு பயிரிடப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு 2.50 லட்சம் ஏக்கர் அளவுக்கு பயிரிடப்பட்டுள்ளது.

அதாவது பல மடங்கு அதிகமாக பயிரிடப்பட்டுள்ளது. காரிப் பருவத்தில் சரியாக மழை பெய்யாததாலும், பலர் நெல் பயிரை விட்டு விட்டு, துவரை பயிரிட்டனர். அதனால், அடுத்த சில மாதங்களில் சந்தைக்கு துவரம் பருப்பு அதிக அளவில் விற்பனைக்கு வரலாம். நிச்சயம் விலை குறைய வாய்ப்பு உண்டு. இது நுகர்வோருக்கு இனிப்பான செய்தியே. இவ்வாறு வியாபாரி கூறினார்.

**பி.டி., ரக பருத்தி கருகியதாக விவசாயிகள் கலெக்டரிடம் புகார்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட பி.டி., ரக பருத்தி கருகியதாக விவசாயிகள் கலெக்டரிடம் புகார் தெரிவித்தனர். இதுகுறித்து தர்மபுரியை அடுத்த மொரப்பூர் சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலெக்டர் அமுதாவிடம் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது:பி.டி., ரக பருத்தியை பயிரிடுவதால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும் என அரசு பரிந்துரை செய்தது. இதை ஏற்று, பயிரிட்டோம். கடந்த காலத்தில் ஓரளவு லாபம் கிடைத்தது. இதேபோல், கடந்த ஆண்டு மொரப்பூர், தாசரள்ளி, இலவடை, பொம்மிடி, கோபிநாதம்பட்டி உள்ளிட்ட 17 கிராமங்களில் 360 விவசாயிகள் ஆயிரம் ஏக்கரில் பி.டி., ரக பருத்தியை சாகுபடி செய்தோம். இந்த முறை செடி வளர்ந்து, காய் முளைவிட்டபோது கருகி விட்டது. புழு வெட்டும் அதிகமாக உள்ளது. இதனால், மகசூல் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு, தரமற்ற விதைகளும், உரங்களும் காரணம். ஏனவே, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுத்து நஷ்ட ஈடு பெற்று தர வேண்டும். இவ்வாறு அவர்கள் அந்த புகார் மனுவில் தெரிவித்துள்ளனர்.

**கோபி வட்டாரத்தில் கரும்பு சாகுபடி உயர வாய்ப்பு : சர்க்கரை தட்டுப்பாடு, விலை உயர்வு எதிரொலி**

கோபிசெட்டிபாளையம்: சர்க்கரை தட்டுப்பாடு மற்றும் கடுமையான விலை உயர்வால் நடப்பாண்டு முதல்போக சாகுபடியில் கோபி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் அதிகளவில் கரும்பு பயிரிட விவசாயிகள் ஆர்வத்துடன் உள்ளனர்.சென்றாண்டு ஜனவரி மாதத்தில் சில்லரை விற்பனைக் கடைகளில் ஒரு கிலோ சர்க்கரை 20 ரூபாய்க்கு விற்றது. பின்னர் படிப்படியாக சர்க்கரை விலை உயர்ந்து தற்போது 47 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரே ஆண்டில் 100 சதவீதம் விலை உயர்வை சர்க்கரை சந்தித்துள்ளது. மத்திய அரசு சர்க்கரை விலையை குறைக்கும் வகையில் வெளிநாட்டில் இருந்து கச்சா சர்க்கரையை இறக்குமதி செய்வதாக அறிவித்துள்ளது. ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு கச்சா சர்க்கரை வரவில்லை.
மேலும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையை பொது விநியோக திட்டத்துக்கு தரவேண்டும் என அரசு வாய்மொழி உத்தரவு பிறப்பித்துள்ளது.

அரசின் உத்தரவால் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வெளி மார்கெட்டில் சர்க்கரை விற்பனை செய்ய முடியவில்லை. தட்டுபாட்டை பயன்படுத்தி தனியார் சர்க்கரை ஆலைகள், சர்க்கரை விலையை கணிசமான அளவுக்கு உயர்த்தி வருகின்றன. வரும் மார்ச் மாதத்தில் ஒரு கிலோ சர்க்கரை விலை 50 ரூபாயை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
எனினும், கரும்பு கொள்முதல் விலையை விவசாயிகள் கோரும் அளவுக்கு அரசு உயர்த்த மறுக்கிறது. இதனால், விவசாயிகள் சென்றாண்டு கரும்பு சாகுபடியை அறவே மறந்து, மாற்றுப்பயிர்களுக்கு தாவினர். இதனால், நடப்பு அறுவடை பருவத்தில் ஆலைகளுக்கு தேவையான அளவு கரும்பு கிடைப்பது சந்தேகமே. வரும் காலத்தில் சர்க்கரை விலை மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரும்புக்கு கொள்முதல் விலை போதியளவு கிடைக்கவில்லை என்ற போதும், சர்க்கரை விலை உயர்வால் விவசாயிகள் அதிகளவில் கரும்பு பயிரிடத் துவங்கியுள்ளனர். கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசனப பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாய நிலங்களில் நெல்தான் அதிகளவில் பயரிடப்பட்டு வருகிறது.
கரும்பு சாகுபடி இரண்டாம் இடத்தில்தான் உள்ளது. கோபி பகுதிகளில் முதல்போக சாகுபடி வரும் ஏப்ரல் மாதம் துவங்க உள்ளது. சென்றாண்டு நடந்த இரண்டாம் போகத்தில் நெல் பயிரிடப்பட்ட நிலங்களில் தற்போது அறுவடை துவங்கியுள்ளது. நெல் அறுவடை முடிந்த நிலையில் வரும் முதல் போகத்தில் கரும்பு பயிரிட, விவசாயிகள் அடி உரமாக சணப்பை பயிரை பயிரிடத் துவங்கியுள்ளனர். சர்க்கரை விலை உயர்வால், கரும்புக்கான கொள்முதல் விலையும் உயரலாம் என்ற எதிர்பார்ப்பில், கோபி பகுதியில் நடப்பாண்டு அதிகளவில் கரும்பு பயிரிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கண்வலி கிழங்கு சாகுபடி 49 பேருக்கு மானியம்**

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த 49 பேருக்கு 31 லட்சம் ரூபாய் மருத்துவப் பயிருக்கான சாகுபடிக்கு மானியம் வழங்கப்பட்டது. ஈரோடு தோட்டக்கலை துணை இயக்குனர் சுப்பிரமணியன் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் தேசிய மருத்துவப் பயிர்கள் இயக்கத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்யும் பயனாளிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ், கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த 49 பேருக்கு மானியம் வழங்கும் நிகழ்ச்சி சேலத்தில் நடந்தது. வேளாண் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் முன்னிலையில் நடந்த விழாவில், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த 49 பேருக்கு 30.94 லட்சம் ரூபாய் மதிப்பிலான மானியத் தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

**வெள்ளை, சர்க்கரை பூசணி அறுவடை துவக்கம்**

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் சென்றாண்டு அதிகளவில் சாகுபடி செய்யப்பட்ட வெள்ளை பூசணி மற்றும் சர்க்கரை பூசணி அறுவடை தற்போது துவங்கியுள்ளதால், வெள்ளை பூசணி விலை கணிசமாக குறைந்துள்ளது.
நெல், கரும்பு மற்றும் மஞ்சள் போன்ற பயிர்களின் உற்பத்திக்கு பெயர் போன கோபி பகுதியில், சென்ற ஐந்து ஆண்டுகளாக பல மாற்றுப்பயிர்களை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் நெல் சாகுபடியும், உரிய விலை கிடைக்காமலும், குறித்த காலத்தில் வெட்ட ஆலைகள் முன் வராததாலும் கரும்பு சாகுபடியும், நிரந்தர விலை இல்லாததால் மஞ்சள் சாகுபடியும் கோபி பகுதியில் ஆண்டுக்கு ஆண்டுக்கு குறைந்து வருகிறது. இதனால், குறுகிய காலத்தில் அதிக லாபத்தை தரக்கூடிய தோட்டக்கலைப் பயிர்களை கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். வழக்கமாக சிறு அளவிலான தோட்டங்களில்தான் கத்தரிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய், புடலை, மக்காச்சோளம், சேனை கிழங்கு, சாம்பாரில் பயன்படுத்தப்படும் வெள்ளை பூசணி, பொறியலில் பயன்படுத்தப்படும் சர்க்கரை பூசணி காய்கள்

பயிரிடப்படுவது வழக்கம். இரண்டு ஆண்டுகளாக கோபி பகுதியில் தோட்டக்கலை பயிர்களுக்கு அதிகளவில் முக்கியத்துவம் தரப்பட்டு சாகுபடி செய்யப்படுகிறது.

கோபி, கொளப்பலூர், கடத்தூர், சிறுவலூர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளை பூசணி மற்றும் சர்க்கரை பூசணி காய்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டன. தற்போது அறுவடை நடந்து வருவதால் பூசணிக் காய்கள் வரத்து அதிகரித்துள்ளது.
கடந்த மாதம் வெள்ளை பூசணி மற்றும் சர்க்கரை பூசணி கிலோ ஒன்றுக்கு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விற்றது. அதிக வரத்தால் தற்போது பூசணி கிலோ ஒன்றுக்கு ஐந்து வரை விற்பனை செய்யப்படுகிறது. "வரும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மாதங்கள் திருமணம் உள்ளிட்ட சுப விசேஷங்கள் நடக்கும் காலமாகும். ஒரு மாத காலம் வரை கெடாமல் இருக்கும் பூசணிக்காய்களுக்கு சுப விசேஷ காலத்தில் விலை உயர வாய்ப்புண்டு' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கோழி வளர்ப்பில் புதிய யுக்திகள்' குறித்த கருத்தரங்கு**

நா.புதுக்கோட்டை: நாகமலைபுதுக் கோட்டை வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில், "கோழி வளர்ப்பில் புதிய யுக்திகள்' குறித்த கருத்தரங்கு நடந்தது. விலங்கியல் துறை தலைவர் கார்த்திகேயன் வரவேற்றார். கல்லூரி பொருளாளர் மணிமாறன் துவக்கி வைத்தார். தமிழக கால்நடை பல்கலை பேராசிரியர் பூவராஜன், "கோழி வளர்ப்பின் பயன்கள், வேலை வாய்ப்புகள்' குறித்தும், பெங்களூரு வெங்கடேஸ்வரா ஹேட்சரிஸ் மேலாளர் சிவக்குமார், "கறிக்கோழி, முட்டைக் கோழி வளர்ப்பு' குறித்தும், ராமநாதபுரம் டி.பி.எம். கோழிப்பண்ணை மேலாளர் காமராஜ், "காடை வளர்ப்பின் பயன்கள், பொருளாதார வளர்ச்சி' குறித்தும், மதுரை வருண் கோழிப் பண்ணை மேலாளர் ஆலயமணி, "கோழி வளர்ப்பில் வர்த்தக மேம்பாடு' குறித்தும் விளக்கினர். பேராசிரியர் முரளி நன்றி கூறினார்.

**நாளை வரை விவசாய கண்காட்சி**

மதுரை சென்னை டிரேட் ஈவென்ட்ஸ் சார்பில், மதுரை காந்தி மியூசியத்தில் விவசாய கண் காட்சி, நாளை (பிப்., 7) வரை நடக்கிறது. விவசாய உழவுக் கருவி, நாற்று நடுதல், களையெடுத்தல், அறுவடை செய்தல், கதிர்களிலிருந்து தானியங்களை பிரித்தெடுத்தல் கருவிகள் வைக்கப் பட்டுள்ளன. பெரும்பாலான கருவிகளுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. விதைகள், பழக்கன்றுகள், விவசாயம் தொடர்பான புத்தகங்கள், திசு வாழை நாற்றுகள், "அக்மார்க்' முத்திரை பெற்ற உணவுப் பொருட்கள் அடங்கிய ஸ்டால்கள், கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை நடக்கும் கண்காட்சியில், அனுமதி இலவசம்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 234 காசு**

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை 234 காசாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இரு தினங்களில் முட்டை விலை 4 காசு ஏற்றம் கண்டிருப்பது பண்ணையாளர்களை மகிழ்ச்சியடைச் செய்துள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, ஏற்றுமதி குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து 232 காசுக்கு விற்பனை செய்து வந்த முட்டை விலை 2 காசு உயர்த்தி 234 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இரு தினங்களில் முட்டை விலை 4 காசு உயர்ந்திருப்பது பண்ணையாளர்களை மகிழ்ச்சியடைச் செய்துள்ளது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: ஹைதராபாத் 225 காசு, விஜயவாடா, தனுகு 225 காசு, நெல்லூர், சித்தூர் 233 காசு, சென்னை 240 காசு, மைசூர் 230 காசு, பெங்களூரு 228 காசு, மும்பை 248 காசு, டில்லி 233 காசு, கோல்கத்தா 255 காசு. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டைக்கோழி விலை 25 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோ கறிக்கோழி 65 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு நஷ்ட ஈடுஆவுடையார்கோவில் யூனியன் குழு கூட்டத்தில் விவாதம்**

ஆவுடையார்கோவில் :ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டத்தில் கவுன்சிலர்கள் புகையான் பூச்சியால் விவசாயிகள் படும் நஷ்டத்தை பற்றி விவாதம் செய்தனர். பின்னர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் தலைவர் ராஜேஸ்வரி தலைமையில், துணைத்தலைவர் ராமநாதன் முன்னிலையில் நடந்தது.கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு :
ராஜநாயகம் : ஆவுடையார்கோவில் பகுதி விவசாய நிலங்கள் அனைத்திலும் நெற்பயிரை புகையான் பூச்சிகள் தாக்கி கடும் சேதத்தை ஏற்படுத்தி விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். விவசாய அதிகாரிகள் நேரில் வந்து பார்த்து நஷ்டமடைந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க தலைவர் முயற்சி செய்ய வேண்டும்.

தலைவர் ராஜேஸ்வரி : விவசாயிகள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி இருப்பது கவலையளிக்கிறது. இதற்கு நிவாரணம் தேடி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி மாவட்ட கலெக்டருக்கு அனுப்பப்படும்.ராஜநாயகம் : திருப்பெருந்துறை ஊராட்சியை சேர்ந்த பூங்குடி கிராமத்திற்கு மின்விநியோகம் சரியாக வருவதில்லை. விளக்குகள் எரிவதில்லை. பம்பு செட்டுகள் இயங்குவதில்லை. மின்சாதனப் பொருட்கள் எதுவும் எரிவதில்லை. அதனை சரி செய்ய வேண்டும். மின்னழுத்தம் சீராக உடனே ஏற்பாடு செய்ய வேண்டும்.
மின்வாரிய உதவி பொறியாளர் குணநாயகம் : அவசர வேலைகள் காரணமாக கவனம் செலுத்த முடியவில்லை. விரைவில் சரி செய்யப்படும்.
கூட்டத்தில் மேற்கு வங்க முன்னாள் முதல்வர் ஜோதிபாசு மறைவிற்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர் பொன்பேத்தி மருதுபாண்டியன், கோபாலபட்டிணம் ரசூல்கான், களபம் காளியம்மாள், புக்கூர் பூமயில், சேவுகப்பெருமாள், ஆணையர் பிரபாகரன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் புவனேஸ்வரன், ராஜாராமன், ஒன்றிய பொருளாளர்கள் கருப்பையா, சேது, ஒன்றிய மேற்பார்வையாளர் சிங்காரம், அன்பரசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தீர்மானங்களை வாசித்தார்.

**நோய் தாக்குதலிலிருந்து பாதுகாக்க இறால் வளர்ப்போருக்கு ஆய்வு கூடம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் இறால் வளர்ப்போர் நோய் தாக்குதலில் இருந்து அவற்றை பாதுகாக்கும் விதமாக பி.சி.ஆர்., ஆய்வு கூடங்கள் மூலம் தரமான இறால் குஞ்சுகளை தேர்வுசெய்யுமாறு கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுகுறித்து கடல்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகத்தின் துணை இயக்குனர் சம்பத்குமார் விடுத்த அறிக்கை: கடலோரக் கிராமங்களை உள்ளடக்கிய இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து தரமான இறால்கள் உற்பத்தி செய்யப்பட்டு அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா உள்ளிட்ட பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு முதல் இறால் உற்பத்தி குறைந்ததால் ஏற்றுமதியும் வெகுவாக குறைந்துள்ளது. குறிப்பாக 2007-08ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 223 டன் இறால் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவை 2008-09ம் ஆண்டில் ஒரு லட்சத்து 26 ஆயிரத்து 42 டன்னாக குறைந்துள்ளது. இந்த ஆண்டு மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறால் ஏற்றுமதி குறைந்துள்ளதால் அன்னியசெலாவணி மூலமான வருவாயும் வெகுவாக குறைந்துள்ளது. இறால் ஏற்றுமதி குறைந்துள்ளதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இறால் மீன்களில் பரவிவரும் வெள்புள்ளி வைரஸ் நோய் தாக்குதல் தான் முக்கிய காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. இந்த நோயை குணப்படுத்த மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில் பண்ணை மேலாண்மையின் மூலம் மட்டுமே இந்நோய் பரவலை கட்டுப்படுத்த முடியும். எனவே இறால் பண்ணை

நடத்தி வருவோர் சரியான விதத்தில் இறால் பண்ணைகள் அமைக்கவேண்டும். குறைந்த அளவில் குஞ்சுகளை பண்ணை குட்டையில் இருப்பு செய்தல் வேண்டும். தண்ணீர் மாற்றத்தை குறைக்க வேண்டும். தேவைக்கேற்றவாறு தீவனமிடுதல் வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக தரமான பொரிப்பகங்களிலிருந்து வளமான இறால் குஞ்சுகளை வாங்கவேண்டும். இதற்கு மத்திய அரசின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையகம் பரிந்துரை செய்துள்ள பி.சி.ஆர் (பாலிமெரைன் செயின் ரீயாக்ஷன்) ஆய்வுக் கூடங்களை அணுகலாம்.

தமிழ்நாட்டில் 11 பி.சி.ஆர்., ஆய்வுக்கூடங்கள் இயங்கி வருகிறது. அவை மரக்காணம் பகுதியில் உள்ள இண்டஸ் அக்வா பீ.சி.ஆர்.லாப்., என்.கே.மெரைன், சீ.பி.அக்வா கல்ஸர், எம்பையோஸீஸ் இந்தியா மற்றும் நீலாங்கரையில் உள்ள பாட்லாப் பையோடெக், பாலவாக்கத்தில் உள்ள ஆசியன் அனாலிட்டிக்ஸ் லேபாரேட்டரீஸ் பிரைவேட் லிமிடெட், நடுகுப்பம் குறோபெஸ்ட் ஃபீட்ஸ், பனையூர் ஜூனோம்பார்க் ஸ்ரிம்ஸ் ரிசர்ச் டையாகனஸ்டிக் இன்ஸ்டிட்டியூட், கைபனிக்குப்பம் வைசாகி பையோ மெரைன் பிரைவேட் லிமிடெட், செட்டிக்குளம் அக்வாகல்சர் இந்தியா பிரைவேட் லிமிடெட், கூனிமேடு ராம் அக்வா ஆகியவையாகும்.

**விவசாயிகள் பசுந்தீவனம் வளர்க்க பரிந்துரை**

சிவகங்கை : கால்நடை பராமரிப்பு இணை இயக்குனர் செல்வராஜ் அறிக்கை: பசு மாடுகளுக்கு தீவனம் கொடுத்தால் அதிக பால் கொடுக்கும். இதற்காக, கோ-3, கோ-4 போன்ற பசுந்தீவன புல் வகைகளை நிலத்தில் பயிரிடலாம். ஏக்கருக்கு 16 ஆயிரம் புல் கரணைகளை நடவேண்டும். வாரம் ஒரு முறை தண்ணீர் விட்டால் போதும். கரணை நட்ட மூன்று மாதங்களில், அறுவடை கிடைக்கும். ஒவ்வொரு ஆண்டும் 150 டன் வரை மகசூல் கிடைக்கும். புல் கரணைகள், இலவசமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஊறுகாய் புல் தயாரிப்பு செயல் விளக்க முகாம்**

சின்னமனூர் : சின்னமனூர் ஒன்றியம் அய்யம்பட்டியில் பசுமை இந்தியா அறக்கட்டளை மற்றும் கால்நடைதுறை இணைந்து நடத்திய கால்நடைகளுக்கான ஊறுகாய் புல் தயாரிப்பு செயல் முறை விளக்க முகாம் நடந்தது. சின்னமனூர் கால்நடை உதவி மருத்துவர் உமாகாந்தன் தலைமை வகித்தார். அறக்கட்டளை இயக்குனர் கனகு வரவேற்றார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ பல்கலை., உழவர் பயிற்சி மைய பேராசிரியர் விஜயலிங்கம் ஊறுகாய் புல் தயாரிப்பு செயல்முறை குறித்து விளக்கினார்.
கால்நடைகளுக்கான தீவன பற்றாக்குறையினை போக்க தீவன கழிவுகள் மற்றும் செடி கொடிகள், அமிலங்களை பயன்படுத்தி மாற்றுதீவனமாக ஊறுகாய்புல் தயாரிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. மேல சிந்தலைசேரி, புலிகுத்தி, டி.சிந்தலைசேரி, பல்லவராயன்பட்டி, மார்க்கையன்கோட்டை, அய்யம்பட்டி, வெள்ளையம்மாள்புரம், சீப்பாலக்கோட்டை உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

**அவுரி விதைக்கு மத்திய அரசு நூறு சதவீதம் மானியம் : தோட்டக்கலைதுறை தகவல்**

தூத்துக்குடி: விதைகள் சேகரிக்க உயர் ரக அவுரி விதைகளை மத்திய அரசு நூறு சதவீத மானிய விலையில் வழங்க உள்ளதாக தோட்டக்கலைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மூலிகை நறுமண பயிர்கள் மையம் மற்றும் தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலைத்துறை இணைந்து புளியம்பட்டியில் மூலிகை மற்றும் நறுமண பயிர்கள் விழிப்புணர்வு முகாம் நடத்தியது. ஒன்றிய துணைத் தலைவர் நடராஜன் தலைமை வகித்தார். ஓட்டப்பிடாரம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் கனகராஜ் வரவேற்றுப் பேசினார்.ஐதராபாத் மத்திய மூலிகை மற்றும் நறுமண பயிர்கள் மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் கலந்து கொண்டு அவுரி, நித்திய கல்யாணி, கண்வலிக்கிழங்கு போன்ற மூலிகை பயிர்கள் பாம்ரோஸ் போன்ற நறுமணப் பொருட்கள் சாகுபடி தொழில் நுட்பம், பொருட்கள் நல்ல விலைக்கு விற்பனை செய்வது குறித்து விரிவாக பேசினர்.விதைகள் சேகரிக்க உயர்ரக அவுரி விதைகளை மத்திய அரசு நூறு சதவீத மானியத்தில் வழங்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மூலிகை பயிர் சாகுபடி செய்வதால் உள்ள நன்மைகள் குறித்து தூத்துக்குடி மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜோசப்கருணாநிதி, ஐடிஐ நிர்வாகி கணபதி, உதவி இயக்குநர் ஆல்பிரட், பழனிவேலாயுதம் ஆகியோர் பேசினர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் அவுரி, நித்திய கல்யாணி பயிர் சாகுபடி செய்பவர்களுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் ஒரு ஹெக்டேருக்கு 5 ஆயிரம் மானியமும், அதிகப்பட்சமாக ஒரு விவசாயிக்கு 4 ஹெக்டேருக்கு 20 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.இந்த மானியம் பெற விரும்புபவர்கள் தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்து பத்து ஒன்று, அடங்கல் நகல்களுடன் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுக வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**செம்மை நெல் சாகுபடி திடல்களில் வேளாண்மை விஞ்ஞானி ஆய்வு**

தென்காசி:வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் செம்மை செல் சாகுபடி திடல்களை வேளாண்மை கல்லூரி விஞ்ஞானி ஆய்வு செய்தார்.வாசுதேவநல்லூர், சுப்பிரமணியபுரம், திருமலாபுரம், கூடலூர், ராயகிரி, சங்குபுரம் பகுதியில் செம்மை நெல் சாகுபடி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்ப மேலாண்மை முகமையின் வாயிலாக அமைக்கப்பட்ட இந்த திடல்களை கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி விஞ்ஞானி ஜோசப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செம்மை நெல் சாகுபடி முறையில் நடவு செய்துள்ள வயல்களில் அதிக அளவு தூர் பிடித்துள்ளதையும், சாதாரணமான வழக்கமான முறையில் நடப்பட்ட வயல்களில் குறைவான அளவே தூர் பிடித்துள்ளதையும் விஞ்ஞானி ஜோசப் விவசாயிகளிடம் விளக்கினார்ஆய்வின் போது வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள், துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், ஆத்மா தலைவர் செண்பகவிநாயகம் உடனிருந்தனர். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லையா, சம்சுதீன், பால்ராஜ், ஆறுமுகம், அண்ணாதுரை, போஸ் செய்திருந்தனர்.

**புரோடீனியா புழு தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை**

மன்னார்குடி : உளுந்து, பாசிப்பயிறு மற்றும் நிலக்கடலை பயிர்களில் புரோடீனியா புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை தெரிவித்துள்ளார்.இதுகுறித்து மன்னார்குடி வேளாண் உதவி இயக்குனர் மயில்வாகணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தற்போது பயிரிட்டுள்ள நிலக்கடலை உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயிர்களில் புரோடீனியா புழு தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. புரோடீனியா புழுவின் தாய் அந்துப்பூச்சி நிலக்கடலை மற்றும் பயறு வகைப் பயிர்களின் இலைகளின் கீழ் பகுதியில் குவியலாக முட்டைகள் இடும். முட்டைகளில் இருந்து வெளிவரும் இளம் புழுக்கள் இலைகளின் அடிப்பகுதியில் கூட்டமாக இருந்து இலைகளை சுரண்டி உண்ணும். இப்புழுக்கள் மென் சாம்பல் நிறத்தில் கண் பகுதியில் கரும்புள்ளிகளுடன் காணப்படும்.

புழுக்கள் சிறிது வளர்ச்சி அடைந்ததும் வயல் முழுவதும் ஊர்ந்து சென்று செடிகளின் இலைகளில் நடுப்பகுதியில் உண்ணும். பாதிக்கப்பட்ட இலைகளின் நடுவில் ஓட்டைகள் காணப்படும். புழுக்கள் இரவு நேரத்தில் உண்ணும் தன்மை உடையதால் பகல் நேரங்களில் புழுக்களை காண இயலாது. பகலில் வயல் இடுக்குகளில் பதுங்கி இருக்கும் இப்புழுக்கள் தோலுரித்து மேலும் வளர்ச்சியடைந்து கரும் பழுப்பு நிறம் அடைந்து செடிகளின் இலைகள், பூக்கள், காய்கள் போன்றவற்றை வேகமாக சாப்பிடும். செடிகள் முழுவதையும் உண்டு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும்.இலைகளின் அடிப்பகுதியில் உள்ள முட்டைக்குவியல்கள் மற்றும் இளம் புழுக்களை இலையுடன் எடுத்து அழிக்க வேண்டும். வளர்ந்த புழுக்களை கையால் பொறுக்கி அழிக்க வேண்டும். புழுக்களை கட்டுப்படுத்த என்.பி.வி. என்ற நச்சுயிரியை ஒரு ஏக்கருக்கு 100 எல்.இ. என்ற அளவில் ஒரு கிலோ நாட்டுச்சர்க்கரை கலந்து 200 லிட்டர் நீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

**நெல் குவிண்டாலுக்கு ரூ.1,500 வழங்க விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

திருவாரூர் :நெல்லுக்கு கொள்முதல் விலையாக அரசு குவிண்டாலுக்கு ஆயிரத்து 500 ரூபாய் வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து சங்க மாவட்டச் செயலாளர் மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கை:தற்போது பனிப்பொழிவு அதிகமாக உள்ளதால் நெல்லில் ஈரப்பதம் அதிகமாக உள்ளது. ஆனால் 17 சதவீதம் ஈரப்பதம் கொண்ட நெல்லை மட்டுமே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் தனியாரிடம் நெல் விற்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

எனவே ஈரப்பதத்தின் அளவை 17 சதவீதத்தில் இருந்து 20 சதவீதம் உயர்த்த வேண்டும். கொள்முதல் நிலையங்களில் நெல் தூற்றப்படும் போது அளவுக்கு அதிகமான நெல் கதிர்கள் வீணடிக்கப்படுகின்றன. மேலும் மின்சாரம் இருக்கும் சமயங்களில் மட்டுமே நெல் தூற்றப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தை பொறுத்தவரை பெரும்பாலான பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் கொள்முதல் நிலையங்களில் பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேலும் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உடனே பணம் வழங்கப்படுவது இல்லை. ஆனால் தனியார் வியாபாரிகள் உடன் பணம் கொடுத்து நெல்லை கொள்முதல் செய்கின்றனர். இதனால் தான் அரசு தரப்பில் நெல் கொள்முதல் என்பது குறிப்பிட்ட இலக்கை எட்ட முடியாமல் போகிறது. நெல்லுக்கு கொள்முதல் விலையாக குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரத்து 500 ரூபாய் வீதம் அரசு வழங்கினால் மட்டுமே விவசாயிகள் நெல் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

**கொத்தமல்லி அறுவடை தீவிரம்**

உடுமலை : கொத்தமல்லி அறுவடையும் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி, 40 கிலோ கொத்தமல்லி 4500 முதல் 5500 வரை விற்று வருகிறது. கூடுதல் விலையை எதிர் பார்த்து, அறுவடை செய்யப்படும் கொத்தமல்லி யை இருப்பு வைக்கத்துவங்கியுள்ளனர். உடுமலை ஒழுங்கு முறை விற்பனை டத்தில், 753 மூட்டை கொத்தமல்லி இருப்பு வைக்கப் பட்டுள்ளது.கொண்டைக்கடலை வரத்து இல்லை: உடுமலை பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட கொண்டைக்கடலைக்கு, போதிய பனிப்பொழிவு இல்லாமல், தண்ணீர் பனி இல்லாமல், "வறட்டு' பனி மட்டுமே வீசியதால், பயிர்கள் கடுமையாக பாதித்துள்ளது. மகசூலும் 50 சதவீதம் வரை குறைந்துள்ளது. வழக்கமாக ஜன., மாதம் பெருமளவு வரத்து இருக்கும் கொண்டைக்கடலை, அறுவடை பணி தாமதமானதால், வரத்து இதுவரை இல்லை.

**நேந்திரன் வாழை விலை உயர்வு**

கிணத்துக்கடவு : கிணத்துக்கடவு பகுதியில் விவசாயிகள் நூறு ஏக்கர் நிலத்தில் வாழை சாகுபடி செய்துள்ளனர். இதில், நேந்திரன், கதலி, கற்பூரவல்லி, பூவன், மோரிஸ், ரஸ்தாலி வகை பழங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ப்பகுதியில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை எடுத்து தினசரி மார்க்கெட்டிற்கு விற்பனை செய்கின்றனர்.நேற்று வாழைத்தார் வாங்க கேரளா வியாபாரி மற்றும் தமிழக வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்தனர். இதில், நேந்திரன் பழத்திற்கு கேரளாவில் மவுசு அதிகம் என்பதால், கேரளா வியாபாரிகளுக்குள் நேந்திரன் பழம் ஏலத்தில் எடுப்பதில் போட்டி ஏற்பட்டது.இதனால், ஒரு கிலோ நேந்திரன் பழம் அதிகபட்சமாக ஒன்பது ரூபாய் வரை ஏலத்தில் சென்றது. இப்பழம் கடந்த வாரத்தை காட்டிலும் மூன்று ரூபாய் கூடுதலாக சென்றது. பின்பு கற்பூரவல்லி தார் ஒன்று 250 முதல் 300 ரூபாய் வரையும், மோரீஸ் 120 முதல் 150 ரூபாய் வரையும், ரஸ்தாலி அதிகபட்சமாக 350 ரூபாய் வரையும், பூவன் பழம் 70 முதல் 100 ரூபாய் வரையும் ஏலத்தில் சென்றது.வால்பாறையில் இயக்கப்படும் அரசு பஸ்சின் முன்புறம் பம்பர் இல்லாமலும், நம்பர் பிளேட் இல்லாமலும் நகரில் வலம் வருகிறது.

**சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி; விவசாயிகள் சோகம்**

பல்லடம் : வெளிமாநிலங்களில் இருந்து சின்ன வெங்காயம் வரத்து தொடர்ந்து அதிகரிப்பதால், உள் ளூர் சின்ன வெங்காயம் கொள் முதல் விலை சரிந்து வருகிறது; பல்லடம் பகுதியில் உள்ள சின்ன வெங்காய விவசாயிகள் சோகம் அடைந்துள்ளனர்.பல்லடம் பகுதியில் கேத்தனூர், மந்திரிபாளையம், ஜல்லிப்பட்டி, குள்ளம்பாளையம், வாவிபாளை யம், மானாசிபாளையம், கணபதி பாளையம் உட்பட பல இடங் களில் 3,000 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய் யப்பட்டிருந்தது. சாகுபடி செய்து 80 நாட்கள் முடிவடைந்ததால், அறு வடை தீவிரமாக நடந்து வருகிறது.பல்லடம் பகுதி சின்ன வெங் காயம் விவசாயிகளிடம் இரு வார மாக தரமான சின்ன வெங்காயம் கிலோ 15 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். அவற்றை, திருப்பூர், திண்டுக்கல், கோவை, தூத்துக்குடி போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பு கின்றனர். இக்கொள்முதல் விலை கட்டுப்படியானதாக இருந்ததால் விவ சாயிகள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர்.சில நாட்களாக, கர்நாடகம், ஆந்திராவில் இருந்து கோவை, திருப்பூர், திண்டுக்கல் மார்க்கெட்டு களுக்கு சின்ன வெங்காயம் வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளது. வெளிமாநிலத்தில் இருந்து சின்ன வெங்காயம் வரத்தால், உள்ளூர் சின்ன வெங்காயத்தின் கொள் முதல் விலை கிலோவுக்கு இரண்டு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை சரிவு ஏற்பட்டுள்ளது. கடந்த மூன்று நாட்களில், கிலோவுக்கு மூன்று ரூபாய் வரை கொள்முதல் விலை சரிவு, பல்லடம் பகுதி சின்ன வெங்காய விவசாயிகளை சோகம் அடையச் செய்துள்ளது.ஜல்லிப்பட்டியைச் சேர்ந்த சின்ன வெங்காய விவசாயி பழனிசாமி கூறியதாவது:ஒரு ஏக்கர் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து அறுவடை செய்ய 30 ஆயிரம் ரூபாய் வரை செலவா கிறது. நல்ல முறையில் மகசூல் கிடைத்தால், ஏக்கருக்கு ஏழு டன் சின்ன வெங்காயம் கிடைக்கும். கடந்த வாரம் வரை தரமான வெங்காயம் கிலோ 15 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, ஆந்திரா, பெங்களூரு, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயம், தமிழகத்தின் முக்கிய பகுதிகளுக்கு வந்துள்ளதால் கொள்முதல் விலை கிலோவுக்கு மூன்று ரூபாய் சரிந்துள்ளது. வெங்காய அறுவடைக்கு பெண்களுக்கு 130 ரூபாய், ஆண்களுக்கு 250 ரூபாய் கூலி வழங்கப்படுகிறது.

கடந்தாண்டு, ஏக்கருக்கு 25 ஆயிரம் ஏற்பட்ட செலவு, இந் தாண்டு கூலி உயர்வு, விதை வெங் காய விலை உயர்வு உள்ளிட் டவை காரணமாக, ஏக்கருக்கு 30 ஆயிரம் வரை செலவாகியுள்ளது. வெங்காய அறுவடைக்கு வரும் காலம், பயிர் பாதுகாப்பு, அறு வடை கூலி அதிகரிப்பை கணக் கிட்டால், வெங்காயம் சாகுபடியில் பெரிதாக வருமானம் தராது. வெங்காயத்துக்கு குறைந்தபட்ச கொள்முதல் விலையாக, கிலோ 15 ரூபாய் இருந்தால் மட்டுமே கட்டுப் படியாகும். சின்ன வெங்காயம் சாகுபடியில் தொடர்ந்து ஆர்வம் காட்ட முடியும். வெளிமாநிலங் களில் இருந்து வரும் சின்ன வெங் காயம் வரத்து இன்னும் மூன்று வாரத்துக்குள் குறைந்து விடும். அதன்பின் உள்ளூர் வெங்காயத் துக்கு மீண்டும் நல்ல விலை கிடைக்கும். இவ்வாறு, விவசாயி பழனிசாமி கூறினார்.

**புடலை விதைகள் தயாரிப்பதில் பல்லடம் விவசாயிகள் ஆர்வம்**

பல்லடம் : புடலங்காய் கொள்முதல் விலை சரிந்துள்ளதால், பல்லடம் பகுதியில் உள்ள விவசாயிகள், வெளிமாநிலங்களுக்கு புடலை விதை விற்பனை செய்ய, விதை தயாரிப்பில் ஆர்வம் காட்டுகின்றனர்.
பல்லடம் பகுதியில் கேத்தனூர், புள்ளியப்பம்பாளையம், வெங்கிட்டாபுரம், கரடிவாவி, செலக்கரிச்சல், பாப்பம்பட்டி, ஜல்லிப்பட்டி, கொடுவாய், பச்சார்பாளையம், மானாசிபாளையம் உட்பட பல இடங்களில் 400 ஏக்கர் பரப்பளவில் புடலங்காய் சாகுபடி செய்யப்பட்டு, அறுவடை செய்யப்படுகிறது. இங்கு அறுவடை சய்யப்படும் புடலங்காய், திருப்பூர் மற்றும் கோவை, ஒட்டன்சத்திரம், தாராபுரம் மற்றும் கேரள பகுதிகளில் உள்ள மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்கு கொண்டுச் செல்லப்படுகிறது. சாகுபடி செய்த 65 நாட்களில் இருந்து தொடர்ந்து இரண்டு மாதங்கள் புடலை பலன் கொடுக்கக்கூடியது. பல்லடம் பகுதியில் குட்டை வரி புடலை ரகம் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தற்போது, புடலங்காய் கிலோ நான்கு ரூபாய் முதல் ஐந்து ரூபாய் மட்டுமே வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுவதால், புடலை விவசாயி களுக்கு எதிர்பார்த்த வருவாய் கிட்டவில்லை. இதன்காரணமாக, இங்குள்ள பல புடலை விவசாயிகள் தங்களின் தோட்டங்களில் புடலை பறிப்பை பெருமளவு கவிட்டு, நன்கு பழுக்க விடத்துவங்கியுள்ளனர். நன்கு பழுத்த புடலங்காயின் விதைகளை எடுத்து, அதை தேய்த்து மேல் தோலை நீக்கி, மிதமான வெப்பத்தில் மூன்று நாட்கள் உலர வைத்தால், அவை விதையாக மாறுகிறது. விதை தயாரித்த 40 நாட்களில் இருந்து, அவற்றை சாகுபடி செய்ய பயன்படுத்தலாம்.

தரமான மூன்று கிலோ எடையுள்ள  புடலையில் இருந்து 80 கிராம் முதல் 100 கிராம் வரை விதைகள் கிடைக்கின்றன. கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திராவில் குட்டை வரி புடலை விதைகள், கிலோவுக்கு 750 ரூபாயில் இருந்து 800 ரூபாய் வரை விலை கிடைப்பதால், பல்லடம் பகுதியில் உள்ள பல விவசாயிகள் வெளிமாநிலங்களுக்கு புடலை விதை தயாரித்து அனுப்புவதில் ஆர்வம் காட்டத் துவங்கியுள்ளனர்.

தினகரன்

**விலைவாசி குறையும்**

பதிவு செய்த நாள் 2/6/2010 1:10:03 AM



புதுடெல்லி : 'விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் பலன்கள் அடுத்த சில வாரங்களில் தெரியும்' என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் உறுதி அளித்துள்ளார்.

டெல்லியில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டத்துக்கு பிறகு காங்கிரஸ் மூத்த தலைவர் மணி சங்கர் அய்யர் அளித்த பேட்டியில், ''விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மாநில முதல்வர்களுடன் ஆலோசித்து பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருப்பதாகவும், அதன் பலன்கள் அடுத்த சில வாரங்களில் தெரியும் என்றும் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். இதில் கலந்து கொண்ட காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த எடுக்கப்பட்டு உள்ள நடவடிக்கைகளின் விவரங்களை தெரிவித்தனர்'' என்றார்.

அசாம் முதல்வர் தருண் கோகய் அளித்த பேட்டியில், ''கள்ளச் சந்தை விற்பனை, அத்தியாவசியப் பொருட்கள் பதுக்கலை தடுப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுத்து, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தும்படி காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதல்வர் களை காரியக் கமிட்டி கேட்டுக் கொண்டது'' என்றார்.

தெலங்கானா தனி மாநில பிரச்னை, அது பற்றி ஆராய அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீகிருஷ்ணா குழு ஆய்வு செய்ய வேண்டிய அம்சங்களின் விவரங்கள் பற்றி மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் விளக்கினார்.

### பி.டி.கத்தரிக்காயை நான் வரவேற்கவில்லை

பதிவு செய்த நாள் 2/6/2010 12:56:38 AM



சென்னை : பருவநிலை மாற்றம் பற்றிய சிறப்பு நிகழ்ச்சி வேப்பேரியில் உள்ள குரு ஸ்ரீ சாந்திவிஜய் ஜெயின் பெண்கள் கல்லூரியில் நேற்று நடந்தது. கல்லூரி முதல்வர் எம்.கே.மாலதி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். சமூக சேவகர் மேதாபட்கர் தலைமை வகித்து பேசியதாவது:
பருவநிலை மாற்றத்துக்கு அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளே காரணம். நமது பொருளாதார கொள்கை உற்பத்தியாளருக்கு முன்னுரிமை தராமல் விற்பனையாளருக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கிறது. இதனால் விவசாயத்தில் நஷ்டம் ஏற்பட்டு விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை கூட ஏற்படுகிறது.
விவசாய நிலங்கள் தொழிற்சாலை கட்டவும், இதர தேவைகளுக்காகவும் இன்று பயன்படுத்தப்படுகின்றன. இதனால், விவசாயிகள் அமைப்புசாரா தொழிலாளர்களாக மாறி வருகின்றனர். 1990 & 2005ம் ஆண்டுகளில் 60 லட்சம் ஹெக்டேர் நிலம் தரிசு நிலமாக மாறியுள்ளது. பல ஆறுகள் வறண்டு விட்டன. இயற்கை மூலதனத்தை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் கழிவு பொருட்கள் அதிகரிக்கின்றன.
உலக வெப்பமயமாதல் மூலம் பனி மலைகள் உருகி நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு கடல் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. மேலும், கால நிலையில் மாற்றமும் ஏற்பட்டு வருகிறது. இதுகுறித்து இளைஞர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பி.டி.கத்தரிக்காயை நான் வரவேற்கவில்லை. ஆனால், மத்திய அமைச்சர் இதுகுறித்து விவசாயிகளிடம் கருத்து கேட்டது வரவேற்கத்தக்கது.
இவ்வாறு மேதாபட்கர் பேசினார். நிகழ்ச்சியில், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் நிறுவனர் நிர்மல், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆய்வு அறக்கட்டளையின் காலநிலைமாற்ற துறையின் திட்ட இயக்குனர் நம்பி கலந்து கொண்டனர்.

### கூட்டுறவு சங்கம் மூலம் குறைந்த வாடகைக்கு விவசாய கருவிகள் மண்டல இணை இயக்குனர் தொடங்கி வைத்தார்

பதிவு செய்த நாள் 2/6/2010 6:38:45 AM

திருவண்ணாமலை:
தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம், விவசாய கருவிகளை குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்குவதற்கான திட்டம் திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் தொடக்க விழா திருவண்ணாமலை அடுத்த காஞ்சி கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நேற்று நடைபெற்றது.
கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் எம்.சுப்ரமணியன் இத்திட்டத்தை தொடங்கி வைத்து பேசுகையில், Ôவிவசாய கூட்டு பொறுப்பு குழு உறுப்பினர்களுக்கு விவசாய கருவிகள் வாங்க குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை கடன் பெறலாம். இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்Õ என்றார்.

நிகழ்ச்சியில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் குழந்தைவேலு, சங்கத்தின் தனி அலுவலர் ரேணு, செங்கம் கள மேலாளர் கருணாகரன், செயலாளர் பாலசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஆறுமுகம் நன்றி கூறினார்.
இந்த திட்டத்தின் கீழ் லாபகரமாக இயங்கி வரும் 13 சங்கங்கள் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டன. அறுவடை இயந்திரம், டிராக்டர், பவர் டில்லர் போன்ற கருவிகள் வாடகைக்கு விடப்படுகிறது.

## அரசு கொள்முதல் நிலையம் இல்லாததால் அடிமாட்டு விலைக்கு விற்கப்படும் நெல் மூட்டைகள்

பதிவு செய்த நாள் 2/6/2010 1:42:33 AM

விருதுநகர் : அரசு நெல் கொள்முதல் நிலையங்களை அமைக்காததால் மாவட்டத்தில் விவசாயிகளிடமிருந்து நெல் மூட்டை களை குறைவான விலைக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.
விருதுநகர் மாவட்டம் வறண்ட மாவட்டமாக உள்ளது. மாவட்டத்தின் சாராசரி மழையை விட நடப்பாண்டில் 200 மி.மீ மழை குறைவாக பதிவாகி உள்ளது. இருப்பினும் மாவட்டத்தின் நெல் களஞ்சியாமாக கருதப்படும் வத்திராயிருப்பு, சேத்தூர், காரியாபட்டி பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கரில் நெல் விவசாயம் நடைபெற்றது. கடந்த ஒரு மாதமாக அறுவடை பணி நடந்து வருகிறது.
மாவட்டத்தில் நவம்பர் மாதம் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் தமிழக நுகர்பொருள் வணிக கழகத்தின் மூலமாக நெல் கொள்முதல் நிலையங்களை திறக்க வேண்டும் என விவசாய சங்கங்கள் வலியுறுத்தின. அதற்கு பதிலாக மாவட்ட நிர்வாகம் டிச.15ம் தேதி கடந்த ஆண்டை போல் தளவாய்புரம், காரியாபட்டி, வத்ராயிருப்பு பகுதிகளில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்கும் என உறுதி அளித்தது.
ஆனால் மாவட்டத்தில் இதுவரை அரசு நெல் கொள்முதல் நிலையங்களை திறக்கவில்லை. அரசு கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு 17 சதவீத ஈரப்பதத்தில் குவிண்டாலுக்கு சன்ன ரகம் ரூ.1100, மோட்டரகம் ரூ.1000 மற்றும் ஊக்கத்தொகையாக ரூ.50 வழங்கப்படும். ஆனால் வியாபாரிகள் 72 கிலோ மூட்டை நெல்லை ரூ.750 முதல் ரூ.800 வரை கொள்முதல் செய்கின்றனர். ஈரப்பதம் இருந்தால் நெல் மூட்டைகளை திருப்பி அனுப்பி விடுகின்றனர். தண்ணீர் கஷ்டத்தில் கிணற்று பாசனத்தில் விளைவித்தும் போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலர் விஜயமுருகன் கூறுகையில், “மாவட்டத்தில் நெல் கொள்முதல் மையங்களை திறக்க முன்கூட்டியே மாவட்ட நிர்வாகத்திடம் வலியுறுத்தினோம். டிச.15ம் தேதி திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. நெல் அறுவடை துவங்கி ஒருமாத காலம் ஆகியும் திறக்கவில்லை. போட்டி இல்லாததால் வியாபாரிகள் குறைந்த விலைக்கே கொள்முதல் செய்கின்றனர்Ó என்றார்.
தமிழ்நாடு நுகர்பொருள் வணிப கழக அதிகாரிகள் கூறுகையில், “நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தளவாய்புரம், வத்திராயிருப்பு பகுதிகளில் திறப்பதில் பிரச்னை இல்லை. காரியாபட்டியில் இடம் கிடைப்பதில் சிக்கல் உள்ளது. விரைவில் திறக்கப்படும்Ó என்றனர்.

## தமிழகத்தில் தினந்தோறும் 10,400 டன் திடக்கழிவு சேகரிப்பு அமைச்சர் மைதீன்கான் தகவல்

பதிவு செய்த நாள் 2/6/2010 3:58:18 AM

தூத்துக்குடி : தமிழகத்தில் தினமும் 10, 400 டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுவதாக அமைச்சர் மைதீன் கான் தெரிவித்தார்.
தூத்துக்குடி சி.வ.அரசு உயர்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநகராட்சி இணைந்து திடக்கழிவு மேலாண்மை மற்றும் பிளாஸ்டிக் தரம் பிரித்தல் விழிப்புணர்வு பிரசார துவக்க விழாவை நடத்தியது. கலெக்டர் பிர காஷ் தலைமை வகித்தார். மேயர் கஸ்தூரி தங்கம், இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனத்தின் முதுநிலை உபதலைவர் நந்தகுமார் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ராமச்சந்திரன் வரவேற்றார்.
இதில் சுற்றுச்சூழல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் மைதீன்கான் பேசியதாவது:

பிளாஸ்டிக் கழிவுகளால் சுற்றுப்புறச்சூழலுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தற்போது இது போன்ற கழிவுகளை இந் தியா சிமென்ட்ஸ் நிறுவனம் வாங்கி பயன்படுத்த முன் வந்துள்ளது. அவர்கள் சுற்றுப்புறச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அவை களை பயன்படுத்துகின்றனர். தமிழகத்தில் தினமும் 10, 400 டன் திடக்கழிவு சேகரிக்கப்படுகிறது.

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும் பயன்படுத்தப்பட்டு வீசப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக தரம்பிரித்து அவற்றை பயன்படுத்தும் நிறுவனங்களிடம் ஒப்படைக்க உள்ளாட்சி அமைப்புகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்,“ டீக்கடை முதல் அனைத்து இடங்களிலும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் மழைநீர் பூமிக்கடியில் செல்ல முடியா மல் தேங்கி நிற்பதும், நிலத் தடி நீர் குறைவதும் மிகப்பெரிய ஆபத்துக்கு வழிவகுக்கிறது. பொதுமக்கள் தானாக முன்வந்து பிளாஸ் டிக் பொருட்களை தவிர்க்க வேண்டும்“ என்றார்.

முன்னதாக சி.வ. அரசு உயர்நிலைப்பள்ளியில் அமைச்சர்கள் மரக்கன்றுகளை நட்டனர். பின்னர் விழிப்புணர்வு பிரசார பேரணியை துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையர் குபேந்திரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரைட் சேவியர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### காபி விவசாய பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் 2/6/2010 4:19:54 AM

கூடலூர் : நீலகிரி மாவட்டம் கூடலூர் காபி வாரியம் சார்பில் பந்தலூர் தாலுகா நிலாக்கோட்டை ஊராட்சிக்குட்பட்ட பிதர்காட்டில் காபி விவசாயிகள் தொடர்பு முகாம் வருகிற 8ம் தேதி துவங்கி 3 நாட்கள் நடக்கிறது. முதல் இரு நாட்களில் காபி தொழில்நுட்ப வல்லுணர்கள் காபி தோட்டங்களை பார்வையிட்டு தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்க உள்ளனர். 10ம் தேதி பிதர்காடு சமுதாய கூடத்தில் காபி விவசாய தொழில்நுட்ப கருத்தரங்கு நடக்கிறது. அதில் காபி வாரிய மற்றும் கூடலூர் தோட்டக்கலை துறை தொழில்நுட்ப வல்லுணர்கள், காபி மற்றும் தோட்டக்கலை குறித்து விளக்கம் அளிக்க உள்ளனர். மண்மாதிரிகள் பரிசோதனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் இந்த கூட்டங்களில் பங்கேற்று பயன்பெறுமாறு கூடலூர் காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பவானிசாகர் நீர்வரத்து சரிந்தாலும் கீழ்பவானி பாசனத்துக்கு சிக்கல் இல்லை அதிகாரிகள் நம்பிக்கை

பதிவு செய்த நாள் 2/6/2010 4:08:13 AM

ஈரோடு : நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து சரிவடைந்து வரும் நிலையில் கீழ்பவானி வாய்க்காலில் (எல்பிபி) புன்செய் பாசனத்துக்காக இரண்டாம் சுற்றுக்கு 2300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீர்வரத்து குறைந்தாலும் தற்போதைய நீர் இருப்பை கொண்டு பாசனத்துக்கு குறைவின்றி நீர் விநியோகம் செய்ய முடியும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பவானிசாகர் அணை யின் மொத்த கொள்ளளவு 105 அடி. மொத்தம் 32 டி.எம்.சி., வரையிலும் அணையில் தண்ணீர் சேமிக்க முடியும். நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை இல்லாததால் அணைக்கு நீர்வரத்து நாளுக்கு நாள் சரிவடைந்து வருகிறது. நேற்று காலை அணைக்கு 935 கனஅடி நீர்வரத்து இருந்த நிலையில் மாலை 4 மணிக்கு நீர்வரத்து 202 கனஅடியாக குறைந்து போனது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 84.61 அடியாகவும், நீர்இருப்பு 18.2 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. அணையில் இருந்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை பாசனத்துக்காக 400 கனஅடி, காளிங்கராயன் பாசனத்துக்கு 400 கனஅடி வீதம் ஆற்றில் மொத்தம் 800 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது.

தற்போதைய நீர்இருப்பு திருப்திகரமாக உள்ளதால் நீர் விநியோகம் செய்வதில் சிக்கல் வர வாய்ப்பில்லை என பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர். பொதுப்பணித்துறையினர் கூறியதாவது, பவானிசாகர்

அணையிலிருந்து எல்பிபி வாய்க்காலில் புன்செய் பாசனத்துக்குட்பட்ட ஒரு லட்சத்து 3500 ஏக்கர் பாசனத்துக்காக கடந்த ஜனவரி 5ம் தேதி முதல் 20ம் தேதி வரை முதல்சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. 12 நாட்கள் இடைவெளிக்கு பிறகு மீண்டும் இம்மாதம் 2ம் தேதி முதல் 14ம் தேதி வரை 12 நாட்களுக்கு இரண்டாம் சுற்றுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 2ம் தேதி துவக்கத்தில் எல்பிபி வாய்க்காலில் 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு படிப்படியாக அதிகரித்து தற்சமயம் 2300 கனஅடி வீதம் வாய்க்காலில் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. ஏப்ரல் 30ம் தேதி வரை எல்பீபி., பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும்.
தடப்பள்ளி& அரக்கன்கோட்டை பாசனத்துக்கு வரும் 15ம் தேதியுடன் பாசன காலம் நிறைவு பெறு கிறது.
காளிங்கராயன் பாசனத்துக்கு அதிகபட்சமாக ஏப்ரல் 15ம் தேதி வரையிலும் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.
தற்போதைய நீர்இருப்பான 18 டி.எம்.சி., மற் றும் நீர்வரத்தை கொண்டு இம்மூன்று வாய்க்கால் பாசனத்துக்கும் நீர்விநியோகம் செய்ய முடியும். தற்சமயம் அணைக்கு நீர்வரத்து மிகவும் குறைந்துள்ளது. வழக்கமாக பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் அணையின் நீர்வரத்து குறைவாகவே இருக்கும். நீர்இருப்பு போதுமானதாக உள்ளதால் நடப்பாண்டில் பாசனத்துக்கு நீர்மேலாண்மை செய்வதில் சிரமம் இருக்காது.
இவ்வாறு பொதுப்பணித்துறையினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

## சென்ட்ரல் மார்க்கெட் கடை விவகாரத்தில் மீண்டும் சிக்கல் மாநகராட்சி முடிவை ஏற்க வியாபாரிகள் மறுப்பு

பதிவு செய்த நாள் 2/6/2010 1:33:08 AM

மதுரை : மதுரை மாட்டுத்தாவணியில் புதிதாக அமையும் சென்ட்ரல் மார்க்கெட் கடைகளுக்கு டெபாசிட், வாடகை உயர்வு விவகாரத்தில் மீண்டும் சிக்கல் உருவாகி உள்ளது. மாநகராட்சி முடிவை வியாபாரிகள் ஏற்க மறுத்து வருகின்றனர்.
மதுரை நகருக்குள் போக்குவரத்து நெருக்கடி குறைப்பதற்காக மீனாட்சி அம்மன் கோயில் அருகிலுள்ள சென்ட்ரல் மார்க்கெட் இடம் மாற்றம் செய்யப்படுகிறது. இதற்காக மாட்டுத்தாவணியில் புதிய மார்க்கெட் ரூ.8 கோடியில் கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. இங்கு 1,270 கடைகள் உருவாகின்றன. இதில் தற்போதுள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கு கடை ஒதுக்கப்படுகிறது. இதற்கு மாநகராட்சி நிர்ணயித்த டெபாசிட், வாடகை உயர்வை வியாபாரிகள் எதிர்த்தனர்.
இதைதொடர்ந்து பொசிட் குறைக்கப்பட்டது. பெரிய கடைகள் மொத்தம் 284. இதற்கு டெபாசிட் தலா ரூ.4 லட்சம் என்பது ஒன்றரை லட்சமாக குறைக்கப்பட்டது. சிறிய கடைகள் மொத்தம் 240. டெபாசிட் ரூ.3 லட்சம் என்பது ஒரு லட்சமாக குறைக்கப்பட்டது. தரைக்கடைகள் மொத்தம் 750. டெபாசிட் ரூ.2 லட்சம் என்பது ரூ.75 ஆயிரமாக குறைக்கப்பட்டது.
இதை வியாபாரிகள் ஏற்க மறுத்து வருகின்றனர். மார்க்கெட் மாத வாடகை கடை வியாபாரிகள் சங்க கூட்டம் தலைவர் செல்லத்துரை தலைமையில் நடந்தது. துணை தலைவர்கள் விஜயபாஸ்கர், செந்தில்குமார், செயலாளர் ராதாகிருஷ்ணன், துணை செயலாளர்கள் பழனிச்சாமி, நாகராஜன், பொருளாளர் காமராஜ், துணை பொருளாளர் கருப்பையா, ஆலோசகர் முருகன், செயற்குழு கமிட்டி தலைர் முத்துப்பாண்டி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.
இதில் நிறைவேறிய முக்கிய தீர்மானங்கள்:& புதிய மார்க்கெட்டில் கடைகளுக்கு டெபாசிட், வாடகை உயர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். மத்திய அமைச்சர் முக.அழகிரி மேற்கொண்ட பெரும் முயற்சியால் மாட்டுத் தாவணியில் புதிய சென்ட்ரல் மார்க்கெட் உருவாகி உள்ளது. எனவே இந்த மார்க்கெட்டிற்கு முக.அழகிரி பெயர் சூட்ட வேண்டும் என அரசையும், மாநகராட்சியையும் கேட்டுக் கொள்கிறது.
சங்க தலைவர் செல்லத்துரை கூறும்போது “ தற்போதுள்ள வாடகையில் ஓராண்டு அட்வான்ஸ் பெற்றுக் கொண்டு மாநகராட்சி கடை ஒதுக்க வேண்டும். இதன் மூலம் ரூ.3 கோடி கிடைக்கும். இது தவிர தற்போதுள்ள மார்க்கெட் வியாபாரிகளுக்கு ஒதுக்கப்பட்ட கடைகள் தவிர, கூடுதலாக கட்டப்பட்டுள்ள கடைகள் மூலம் ரூ.5 கோடி டெபாசிட் கிடைக்கிறது. எனவே மார்க்கெட் கட்டிய ரூ.8 கோடி மாநகராட்சிக்கு கிடைத்து விடுகிறது“ என்றார்.

மாநகராட்சி ஆணையாளர் கூறும்போது " மாநகராட்சியின் நிதி நிலையை எண்ணி பார்க்க வேண்டும். ஏற்கனவே நிர்ணயித்த டெபாசிட் தொகை குறைக்கப்பட்டுள்ளது. மார்க்கெட் அமைக்கப்படும் இடத்தின் மதிப்பு ரூ.150 கோடி. ரூ.8 கோடி மக்கள் பணத்தில் மார்க்கெட் கட்டப்பட்டுள்ளது. டெபாசிட், வாடகை உயர்வை ஏற்றுக் கொண்டு மாநகராட்சிக்கு ஒத்துழைக்க வேண்டும்" என்றார்.

**பண்ணை இயந்திரங்கள் கையாளுதல் பயிற்சி**

பதிவு செய்த நாள் 2/6/2010 6:15:21 AM

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் கையாளுதல் குறித்த இரண்டு வார பயிற்சி நடைபெறுகிறது. தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் கலெக்டர் விஜயக்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது :

தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை இயந்திரங்கள் பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டு இரண்டு வாரபயிற்சி, இம்மாதம் 2வது வாரத்தில் தொடங்கி நடைபெறவுள்ளது.

பவர் டிரில்லர் இயக்குதல், பராமரித்தல் மற்றும் மேலாண்மைப் பயிற்சி, நடவுஇயந்திரம், களைஎடுக்கும் கருவி, கதிரடிக்கும் கருவி, அறுவடை இயந்திரக் கருவிகள் பற்றிய பயிற்சி உள்ளிட்டப் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதில் கலந்து கொள்ள 18வயது முதல் 40வயது வரையுள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. பயிற்சியில் கலந்துகொள்ளும் விவசாயிகளுக்கு அரசு விதிமுறையின்படி பயிற்சி முடிவின்போது உதவித்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் வேளாண்மைப் பொறியியல்துறை, உதவி செயற்பொறியாளர், 158 புதுக்காலணி, வடக்குத் தெரு, துறைமங்கலம், பெரம்பலூரிலுள்ள அலுவலகத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பங்களை அளிக்கலாம். இவ்வாறு கலெக்டர் விஜயக்குமார் தெரிவித்துள்ளார்.

**பருவகால மாற்றத்தை கட்டுப்படுத்த இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டும் பெரியார் பல்கலை. துணைவேந்தர் பேச்சு**

பதிவு செய்த நாள் 2/6/2010 6:23:27 AM

தஞ்சை: பருவகால மாற்றத்தை கட்டுப்படுத்த இயற்கை வளங்களை பாதுகா க்க வேண்டும் என பெரியார் மணியம்மை பல்கலைக்கழக துணைவேந்தர் நல்.ராமச்சந்திரன் பேசினார்.

தஞ்சை பெரியார் மணியம் மை பல்கலைக்கழகத்தில் பருவ கால மாற்றம் மற்றும் அறிவியல் தொழில் நுட்ப கண்காட்சி கருத்தரங்கம் தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதில் துணைவேந்தர் நல்.ராமச்சந்திரன் பேசியது;

நாட்டில் தற்போது பெருகியுள்ள தொழில் புரட்சியின் காரணமாக இதன் தாக்கம் மேன்மேலும் பெருகியுள்ளது. பருவகால மாற்றத்திற்கு அடிப்படைக்காரணம் பூமியின் வெப்பம் கூடிவருவதே. வழக்கத்திற்கு மாறான வெப்பம் உயர்வு, கடல் மட்ட உயர்வு, பனிமலைகள் உருகுதல் போ ன்றவை பூமியின் வெப்பத்தை அதிகரிக்கின்றன.

பருவகால மாற்றத்தினால் நீர்வளம் குறைந்து வருகிறது. விவசாய உற்பத்தியும் குறைகிறது. இதனால் மக்களின் வாழ்க்கையும் கேள்விக்குறியாகி வருகிறது. பூமி வெப்பம் அடைவதைத் தடுக்க இப்பொழுது நடவடிக்கை எடுத்தாலும் தற்போதுள்ள நிலைமையை மாற்றி முன்பு இருந்த பழைய நிலைமைக்கு கொண்டுவர இன்னும் 100 ஆண்டுகள் தேவைப்படும் என அறிஞர்கள் கூறுகின்றனர்.

பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தில் பருவ கால மாற்ற ஆய்வு மையம் இயங்கி வருகிறது. இம்மையம் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் வழி காட்டலில் 2004ல் தொடங்கப்பட்டது.

கவின்மிகு தஞ்சையை உருவாக்குதல் மற்றும் ஊரக மேம்பாட்டு திட்டம் ஆகிய வை எங்கள் பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கமாகும். புத்தாக்க எரிசக்தி பல்கலைக்கழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பரு வகால

மாற்றத்தை அனைத்துதர மக்களும் அறிந்துக்கொள்ளகூடிய வகையில் விழிப்புணர்வு மேற்கொண்டு வருகி றோம். பருவகால மாற்ற த்¬ த கட்டுப்படுத்தினால் தான் பூமியின் அழிவை காப்பாற்ற முடியும். அனை வரும், போ திய அளவு இயற் கை வளங்களை பாதுகாக்க வேண் டும். எரிசக்தி பய ன்பாட்டை முடிந்தளவிற்கு குறைக்க வேண்டும் என்றார்.